
PUBLIC LIBRARY
JAFFNA.

ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

16.10.2013 - மலர் 10, இதழ் 33



## 'ஹஜ்ஜுப் பெருநாள்' வாழ்த்துக்கள்



# நிலக்கரியிலிருந்து மின்சாரம் உற்பத்தியாகும் படிமுறை

## உயிரியல் வகைப்பாடு

## நிலவில் இரண்டாவது மனிதன்

## வியப்பூட்டும் புதுவகை சைக்கிள்!

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள்பதியின் தீர்மானம்

நாட்டின் மன்னனுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தீய எண்ணம் கொண்ட அமைச்சருக்கு உதவி உபகாரங்களைச் செய்ய ஆள்பதி பிரவுன்ரிக் அனுமதி வழங்கவில்லை. தான் நாட்டு மக்களின் பாதுகாவலன் என்றும் பழைய சாஸ்திர சம்பிரதாயங்களை அழிந்துபோகாமல் பாதுகாப்பதற்கு முயற்சிப்பதாகவும் அவர்களுக்கு எஹலப்பொல எடுத்துரைக்க முயற்சித்தான்.


இதேவேளை, மன்னனுக்கு எதிராக நாட்டில் எதிர்ப்பலைகள் அதிகளவில் உருவாகி இருந்தன. எனினும், கிளர்ச்சிக்குக் காரணம் அதுவல்ல. எஹலப்பொலையின் தனிப்பட்ட விடயங்களே காரணம் என்பதை ஆங்கிலேயர்கள் நன்கு அறிந்து கொண்டனர். இறுதியில் எஹலப்பொலையும் அவனது நெருங்கிய நண்பனுமாகிய எக்னெலிகொடயும் இணைந்து ஆங்கிலப் படைப்பிரிவொன்றையோ அல்லது அவர்களின் நிர்வாகத்திற்குட்பட்டவர்களைக் கொண்ட படையொன்றையோ தமக்கு வழங்கும்படி கேட்டதுடன், யுத்த தளபாடங்களையும் கேட்டனர். அவை எதனையும் வழங்கமுடியாது என ஆள்பதி உறுதியாகத் தெரிவித்தார். எஹலப்பொலைக்கும் ஏனைய பிரதானிகளினதும் மக்களினதும் ஆதரவு கிடைக்காததால்தான் ஆங்கிலேயரின் உதவி தேவைப்பட்டது.

இதற்கிடையில், மன்னர் மிக விரைவாகச் செயற்பட ஆரம்பித்தார். எஹலப்பொலையின் மாயவலையில் சிக்கவேண்டாம் என மக்களுக்குத் தெரிவித்தார். தன்மீது விசுவாசம் வைத்து தனக்குச் சார்பாக செயற்படும்படி அவர்களை கேட்டுக்கொண்டார். அனைத்திற்கும் துரோகம் விளைவித்த எஹலப்பொலைக்கு விலங்கிட்டு அழைத்துவரும்படி மொல்லிகொட பிரதானிக்கு கட்டளையிட்டார். மொல்லிகொடையால் மூன்று கோரளை மற்றும் நான்கு கோரளை வாழ் மக்கள் மன்னருக்கு சார்புடையோராக மாற்றப்பட்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk






# பிரித்தானிய பொறியியலாளரின் வியப்பூட்டும் சைக்கிள்

பிரித்தானியாவைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர், சைக்கிள் ஒன்றுக்கு இதுவரை அறிமுகமாகாத வகையிலான புதிய வடிவம் ஒன்றை வழங்கியுள்ளார். அதன்படி உருவான இந்த சைக்கிளை ஓட்டும்போது, எந்தவொரு கரடுமுரடான பாதையும் சீரான பாதையாகவே தோன்றும். இங்கிலாந்தின் நொட்டின்ஹம்மில் வசிக்கும் 44 வயதான இயந்திரவியல் பொறியியலாளரான சேம் பியர்ஸ் என்பவரே இந்த புதிய சைக்கிளை வடிவமைத்துள்ளார்.

இது பற்றி சேம் கூறும்போது;

"2007 ஆம் ஆண்டு ஒரு நாள் ஒல்லாந்து விமானநிலையத்தில் அமர்ந்திருக்கும்போது, ஒரு தாய் தனது குழந்தையை சக்கரநாற்காலியில் வைத்துக்கொண்டு கற்கள் பதிக்கப்பட்டுள்ள ஓர் இடத்தினூடாக அதனைத் தள்ளிச் செல்ல பெரும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது சக்கரங்களுக்கு ஏன் சஸ்பென்ஷன் பொருத்தக்கூடாது என்று நான் யோசித்தேன். அந்தப் பொழுதிலேயே ஒரு தாளில் அதனை நான் வரைந்தும் கொண்டேன். இரண்டாண்டுகள் கழித்து ஓய்வு கிடைத்த ஒரு மாலைப் பொழுதில், நான் குறித்த மாதிரியை உருவாக்கினேன். றிம், டயர் மற்றும் ஹப் ஆகியவற்றைக் கொள்வனவு செய்தேன். சைக்கிளின் சக்கரங்களுக்குள் வளையங்களை நானே தயாரித்தேன். அது நன்கு இயங்கியது'' என்றார்.




உண்மையில் இதுவொரு வியப்பூட்டும் சைக்கிளாகும். இந்த சைக்கிளின் சக்கரங்களில் ஸ்போக் கம்பிகள் இல்லை. அவற்றுக்குப் பதிலாக வளையங்களே உள்ளன. இதனை அவர் 'லூப்வீல்' (Loopwheel) என்று கூறுகின்றார். பொதுவாக சக்கர நாற்காலிகள் மற்றும் தள்ளிக் கொண்டு செல்லும் வண்டிகளுக்கென அவர் இதனை திட்டமிட்டாலும் இது



அவருக்கு ஒரு புதிய அனுபவமாகவே அமைந்தது. அவருக்கு இந்த புதிய தயாரிப்பை வெற்றிகரமாக முடிப்பதற்கு நான்கு ஆண்டுகள் சென்றன.

"முதலில் நான் மௌன்டன் சைக்கிள் சக்கரத்தையே உருவாக்கினேன். அது பேரிரைச்சலை ஏற்படுத்தியது. அதனை சரியாகத் திருப்பவும் முடியவில்லை.எனினும், கரடுமுரடான பாதையில் அது சிறந்த முறையில் இயங்கியது. இந்த புதிய தயாரிப்பை உருவாக்குவதற்காக 40 சக்கரங்களையும் 200 வளையங்களையும் தயாரித்தேன். பின்னர் அவற்றில் சரியானவற்றைத் தெரிவுசெய்தேன்'' என்று தனது முயற்சி [illegible] குறிப்பிட்டார்.




முதலில் 20 அங்குலமுடைய சக்கரங்களுக்கு ஏற்றவாறே இதன் வளையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய சைக்கிள்களை பாரியளவில் தயாரிக்கவே சேம் முயற்சிக்கின்றார். இதற்காக ஒரு தொழிற்சாலையை அமைக்கவும் அதற்குத் தேவையான உபகரணங்களையும் கருவிகளையும் கொள்வனவு செய்ய அதிகளவு பணத்தினை முதலீடு செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலையிலேயே, அவர் கிக்ஸ்டாட்டர் இணையத்தளத்தின் உதவியைக் கோரினார். அதில், இந்த செயற்றிட்டம் குறித்து விபரங்கள் வெளியிடப்பட்டன. இதற்கென அவருக்கு 40,000 பவுண்கள் தேவைப்பட்டன. ஆனால், கிக்ஸ்டாட்டரினூடாக அவருக்கு 480,000 பவுண்கள் கிடைத்தன.

"ஆரம்பத்தில் இந்த சைக்கிளில் ஏறியதும் சாதாரண சைக்கிள் போன்றுதான் தோன்றும். கரடுமுரடான பாதைக்கு வந்ததும்தான் வித்தியாசம் தெரியும். இதை செலுத்தும்போது உங்களுக்கு ஒரு புதிய அனுபவம் காத்திருக்கும்'' என்று சேம் பியர்ஸ் கூறுகின்றார். ஆரம்பத்தில் நடுத்தர அளவில் சக்கரங்களை உருவாக்கினாலும், இனிவரும் காலங்களில் சகல அளவுகளிலும் சக்கரங்களைத் தயாரிக்க சேம் எண்ணியுள்ளார்.

-கவிதா

DIPLOMA IN ENGLISH விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
கிலாஸ் போகாமலே ஆங்கிலம் படிக்கலாம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேதிக விபரங்களுக்கு
பெயர் / முகவரியை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப் பயிற்சி/உரையாடல் வீடியோ சீடி - 4 நான்கு
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று தமிழ் மூலம்.
@- அழகிய கைக்கடிகாரம் (Watch) ஒன்று / மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோருக்கும் வழங்கப்படும்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1800/= மாத்திரம் அறவிடப்படும். வேறு கட்டணம் இல்லை
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Call: 081-2227711 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொறுமை வேண்டும்

இளைஞன் ஒருவன் அவசரப்புத்தி கொண்டவன். அவன் ஒரு முறை பயணம் மேற்கொண்டபோது நல்ல கோடைகாலம்! வெயில் சுட்டெரித்தது. தாகத்தினால் தவித்த அந்த இளைஞன் ஆற்றுப்படுகை ஒன்றைக் கண்டான். ஆனால், அந்த ஆற்றில் துளிகூட நீரில்லை. வெறும் மணலாகக் காட்சியளித்தது!

என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்த போது, அந்த வழியே துறவி ஒருவர் வந்தார். அவரிடம் தாகத்தைத் தணிக்க ஏதாவது வழி சொல்லும்படி கேட்டுக் கொண்டான் அந்த இளைஞன்.

அதற்கு துறவி ''இந்த ஆற்றுப் படுகையிலேயே நீர் இருக்கின்றது. நீ இந்த மணலைத் தோண்டிப் பார்... நிச்சயம் நீர் கிடைக்கும்'' என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

சிறிது நேரம் கழித்து அந்தத் துறவி மீண்டும் அந்த வழியே திரும்பி வந்தார். மிகவும் களைத்துப்போய் ஒரு கல்லின் மீது அமர்ந்திருந்த அந்த இளைஞனைப் பார்த்தார்.

''உனக்கு நீர் கிடைக்கவில்லையா? ஏன் இப்படிக் களைத்துப் போய் உட்கார்ந்திருக்கிறாய்?'' என்று கேட்டார்.

அதற்கு அந்த இளைஞன், ''ஐயா, நீங்கள் சொன்னபடியே இந்த இடம் முழுவதும் தோண்டிப் பார்த்துவிட்டேன். எங்கேயும் நீர் கிடைக்கவில்லை. அதோ பாருங்கள்...'' என்று காட்டினான்.

இளைஞன் காட்டிய இடத்தைப் பார்த்த துறவிக்கு வியப்பும் அதிர்ச்சியும் ஏற்பட்டது. அந்த இளைஞன் காட்டிய இடத்தில் பல குழிகள் காணப்பட்டன.

உடனே இளைஞனைப் பார்த்த அந்தத் துறவி, ''ஏனப்பா நீ இத்தனை குழிகள் தோண்டியிருக்கிறாய்? இத்தனை குழிகள் தோண்டிய நீ, ஒரே இடத்திலேயே சற்று ஆழமாகத் தோண்டியிருந்தால் நீர் கிடைத்திருக்குமே! நீயும் தாகத்தைத் தணித்திருக்கலாம். இப்போது என்ன நடந்தது பார்த்தாயா? பொறுமை இல்லாமல் இத்தனை குழிகளைத் தோண்டியதால் உனக்கு நீரும் கிடைக்கவில்லை. உனது ஆற்றலும் வீணாகிக் களைத்துப் போய்விட்டாய்....'' என்றார்.

பின்னர் அவரே, தன் கையிலிருந்த தடியால் ஓரிடத்தில் தோண்ட ஆரம்பித்தார். சற்றே ஆழமாகத் தோண்டினார். அங்கே நீர் ஊற்றெடுத்தது. துறவி அந்த இளைஞனை நீர் அருந்தச் செய்து அவனது தாகத்தைத் தணித்தார்.

இளைஞன் தனது அவசரப்புத்தியை உணர்ந்தான். அன்றிலிருந்து பொறுமையாக யோசித்து எதிலும் முடிவெடுக்க வேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டு, துறவிக்கு நன்றி கூறிவிட்டுக் கிளம்பினான்.

# உழைப்பும் மூளையும்



விறகு வெட்டி ஒருவனுக்கு திடீரென்று ஒரு சந்தேகம் வந்துவிட்டது. தன்னுடைய நாட்டு ராஜாவிடம் ''மகாராஜா, தங்களுடைய ராஜ்யத்தில் எல்லாமே நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், எனக்கு மாத்திரம் தினம் இரண்டு பொற்காசுகள் சம்பளம் கொடுக்கிறீர்கள். மந்திரிக்கோ மாதம் ஆயிரம் பொற்காசுகள் சம்பளமாகக் கொடுக்கிறீர்கள். எல்லா மக்களையும் சமமாக நடத்தும் நீங்கள் சம்பள விடயத்தில் மாத்திரம் ஏன் வித்தியாசம் காட்டுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

மகாராஜாவும் ''ஓ... அப்படியா, பேஷ்... சரியான கேள்வி. உனக்கு இதைப்பற்றி சரியான பதில் சொல்கிறேன். முதலில் நீ ஒரு காரியம் செய்யவேண்டும். அதோபார்! அங்கே ஒரு பாரவண்டி போகிறது. அதில் என்ன போகிறது என்று விசாரித்துவிட்டு வா....'' என்றார்.

விறகு வெட்டி ஓடினான். சிறிது நேரத்தில் திரும்பிவந்து, ''மகாராஜா அந்த வண்டி நெல் மூட்டைகளைக் கொண்டு போகிறது'' என்று சொன்னான்.

''அப்படியா சரி எங்கே போகிறது..?'' என்று கேட்டார் ராஜா.

''அதைக் கேட்க மறந்துவிட்டேனே..'' என்று மீண்டும் ஓடிய அந்த விறகு வெட்டி திரும்பிவந்து, ''அது பிரம்மதேசம் போகிறதாம்!'' என்றான்.

''அப்படியா? எங்கிருந்து போகிறதாம்?'' என்று கேட்டார் மகாராஜா.

''அடடா அதைக் கேட்க மறந்துவிட்டேனே...'' என்று விறகுவெட்டி மறுபடியும் ஓடினான்.

கேட்டுவிட்டு திரும்பி வந்த விறகுவெட்டி, ''மகாராஜா... அது, ரங்கசமுத்திரத்திலிருந்து பிரம்மதேசம் போகிறதாம்...'' என்று சொன்னான்.

''அப்படியா அது என்ன நெல்?'' என்றார் மகாராஜா.

மறுபடியும் விறகுவெட்டி ஓட ஆரம்பிக்கும்போது, அங்கே தற்செயலாய் மந்திரி வந்து சேர்ந்தார். மகாராஜா விறகுவெட்டியை உட்காரச்சொல்லிவிட்டு மந்திரியிடம், ''இந்தப் பக்கமாக ஒரு பாரவண்டி கொஞ்ச நேரத்துக்கு முன்னால் போனது. அது எங்கே போகிறது என்று பார்த்துவிட்டு வாருங்கள்...'' என்று கூறினார்.

மந்திரி நிதானமாகப் புறப்பட்டு சென்று சிறிது நேரம் கழித்து வந்தார். ''மகாராஜா, அந்த வண்டி ரங்கசமுத்திரத்திலிருந்து பிரம்மதேசம் போகிறது. நெல் பாரம். யானைக்கொம்பன் நெல் கோட்டை விலை ஏழரை பொற்காசுகள். மழை காரணமாக பாதைகள் சரியில்லாததால், வண்டி இந்த வழியாகப் போகிறது. வண்டி ஓட்டிக்கொண்டு போகிறவனின் பெயர் [illegible]தேவன். தளவாய்த்தேவனின் மகன். சொந்த ஊரே ரங்க சமுத்திரம்தானாம். வயது இருபத்தைந்து இருக்கும்....''

இப்படிப் பல விடயங்களை சொல்லிக்கொண்டே சென்று, ''கடைசியாய் கவனித்ததில் அவனிடத்தில் வித்தியாசமாக ஒன்றும் தோன்றவில்லை. எனினும், மேற்கொண்டு தங்கள் உத்தரவுக்குக் காத்திருக்கிறேன்...'' என்றார் மந்திரி.

விறகுவெட்டிக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது. மந்திரி போனபின் மகாராஜாவிடம் அவன் சொன்னான், ''நம்முடைய மந்திரி எவ்வளவு கெட்டிக்காரராக இருக்கிறார்...'' என்று கூறி தன்னுடைய ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் வெளியிட்டான்.

''இப்போது புரிகிறதா? உனக்கும் மந்திரிக்கும் உள்ள சம்பள வித்தியாசம்...'' என்றார் ராஜா.

''ஹி...ஹி...'' என்று சிரித்து, ''சரிதான்'' என்ற பாவனையில் தலையை ஆட்டினான் விறகுவெட்டி.

மூளை உழைப்பின் நுண்மையை உடல் உழைப்பாளிகள் உணர்ந்துகொள்ள வேண்டும். உடல் உழைப்பின் அருமையை மூளை உழைப்பாளிகள் புரிந்துகொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இறையச்சத்தையும் தியாகத்தையும் பிரதிபலிக்கும்

# 'ஹஜ்ஜுப் பெருநாள்'










அல்லாஹுத்தஆலாவின் கட்டளைக்கு ஏற்ப, இஸ்லாமிய வருடக் கணக்கின் பன்னிரெண்டாம் மாத மான துல் ஹிஜ்ஜா மாதத்தில், மக்கா நகரில் அமைந் துள்ள இறையில்லமாகிய கஃபாவைத் தரிசிப்பதற்காக வும் விதியாக்கப்பட்டுள்ள ஏனைய கிரியைகளை நிறை வேற்றுவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட மகத்துவம் மிக்க ஒரு வழிபாடுதான் 'ஹஜ்' கடமை ஆகும். இந்தக் கடமையின் நிறைவாகவே 'ஹஜ்ஜுப் பெருநாள்' கொண்டாடப்படுகின் றது. அத்துடன், நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் தியாக மனப்பான்மையையும் இறையச்சத்தையும் நினைவுகூரும் ஒரு புனித நாளாகவும் ஹஜ்ஜுப் பெருநாள் சிறப்பிக்கப்படுகின்றது.

நபி இப்றாஹிம் (அலை) அவர்கள் தமது வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே அல்லாஹுத்தஆலாவை மாத்திரமே வணங்க வேண்டும்- அவனுக்கு மாத்திரமே அடிபணிய வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக இருந்தார்கள். இதன் காரணமாக, அவர் ஏராளமான எதிர்ப்புகளுக்கும் இன்னல்களுக்கும் முகம்கொடுக்க நேர்ந்தது. அத்துடன், அவர் தனது வாழ்நாளில் பல்வேறுபட்ட சோதனைகளுக்கும் ஆளானார்.

அதன்படி, ஒரு கட்டத்தில் தனது மனைவி மற்றும் குழந்தையை பாலைவனத்தில் தனியாக விட்டு வரும்படி அல்லாஹுத்தஆலாவிடமிருந்து நபி இப்றாஹீம் (அலை) அவர்களுக்குக் கட்டளை வருகின்றது. உடனே, அந்த இறைக்கட்டளைக்கு அடிபணிந்தவர்களாக அவ்வாறு செய்கின்றார்.

மேலும் ஒருமுறை தமது மகனாகிய இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹுத்தஆலாவுக்காகப் பலியிடுமாறு நபி இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு ஓர் இறைக்கட்டளை விடுக்கப்படுகின்றது. இதனையும் மறுக்காமல் அல்லாஹுத்தஆலாவின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டவர்களாக நிறைவேற்ற அவர்கள் முன்வருகின்றார்.






இதனை அடுத்து, இஸ்மாயில் (அலை) அவர்களுக்குப் பதிலாக ஓர் ஆட்டைப் பலியிடுமாறு அல்லாஹுத்தஆலா கட்டளையிடுகின்றான். இதனை நினைவுகூருமுகமாகவே ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையை அடுத்து 'உழ்ஹிய்யா' (ஆடு, மாடு அல்லது ஒட்டகம் என்பனவற்றில் ஏதாவதொன்றைப் பலியிடுதல்) கொடுக்கப்படுகின்றது. உழ்ஹிய்யா கொடுக்கப்படுவதன் மூலம் ஏழைகள் உட்பட, அனைவரும் பசி, பட்டினி இன்றி உணவுண்டு மகிழ வேண்டும் என்பதையே இஸ்லாம் விரும்புகின்றது.

இவ்வாறு பல்வேறு வழிகளில் நபி இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு சோதனைகள் வந்தன. ஆனால், அவை யாவற்றின்போதும் அல்லாஹுத்தஆலா மீது அளவற்ற அன்பும் இறையச்சமும் நம்பிக்கையும் கொண்டவர்களாக அவற்றை எதிர்கொண்டதனால்,இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு அல்லாஹுத்தஆலா வெற்றியை வழங்கினான். மக்காவுக்கான ஹஜ் யாத்திரையின்போது நிறைவேற்றப்படும் ஹஜ் கடமையுடன் தொடர்புடைய கிரியைகளும்கூட நபி இப்றாஹீம் (அலை) அவர்களுடன் தொடர்புடைய மேற்படி சம்பவங்களின் அடிப்படையிலேயே விதியாக்கப்பட்டுள்ளன.

**ஜீநு**



## பெருநாளன்று...

'பெருநாள்' என்பது தக்பீருடன் ஆரம்பிக்கின்றது. தக்பீருடன் நிறைவு பெறுகின்றது. அன்றைய தினத்தில் அல்லாஹுத்தஆலாவைப் புகழ்ந்து அதிகம் அதிகம் தக்பீர் சொல்ல வேண்டும். ''ஈத் பெருநாட்களை அல்லாஹுத்தஆலாவைப் புகழ்ந்தும் தக்பீர் சொல்லியும் அழகுபடுத்துங்கள்'' என முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே, அன்றைய தினத்தை வீணாகக் கழிக்காமல், நற்காரியங்களில் ஈடுபட வேண்டும். பெருநாளன்று காலையில் குளித்துப் புத்தாடை அல்லது ஆடைகளில் சிறந்த ஆடையை அணிவதும் ஆண்கள் நறுமணம் பூசிக்கொள்வதும் சுன்னத்தாகும். அத்துடன், பெருநாள் தொழுகையை நிறைவேற்றிவிட்டு வந்த பின்னரே காலை உணவு உட்கொள்ள வேண்டும். அன்றைய தினத்தில் குடும்பத்தினர்கள், உற்றார் உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களை அரவணைத்து-உபசரித்து மகிழ வேண்டும். இதன்மூலம் ஒற்றுமை, சகோதரத்துவம், சமத்துவம் என்பன கட்டியெழுப்பப்படுகின்றன. ஆகவே, ஹஜ் உணர்த்தும் படிப்பினைகளை வாழ்வில் கடைப்பிடித்து வாழ அல்லாஹுத்தஆலா அனைவருக்கும் அருள் புரிவானாக!

*வாசகர்களுக்கு புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்.*

## புலமைப்பரிசில் சித்தியடைந்தோர் புகைப்படம்

### 70 புள்ளிகளுக்கு மேல் அனைவரும் அனுப்பலாம்

2013 தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் புகைப்படங்களை 'விஜய்' பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு நாம் தயாராக உள்ளோம். பிள்ளைகளின் மன உணர்வுகளை நன்றாக உணர்ந்துள்ள 'விஜய்', மேற்படி பரீட்சையில் மொத்தமாக 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற அனைவரையுமே சித்தியடைந்தவர்களாகவே கருதுகின்றது. எனவே, 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவ, மாணவிகள் தமது புகைப்படத்துடன் தாம் பெற்ற புள்ளிகளைக் குறிப்பிட்டு, கீழ்காணும் கூப்பனை நிரப்பி, புள்ளிகளைக் காட்டும் அத்தாட்சியையும் இணைத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**(குறிப்பு: குழுப்படம் அனுப்புபவர்கள் தனிப்படம் மற்றும் விபரங்கள் அனுப்புவதைத் தவிர்க்கவும்)**

**கூப்பன்**

பெயர்: ..........................................

புள்ளிகள்: ..........................................

பாடசாலை: ..........................................

..........................................

வீட்டு முகவரி : ..........................................

..........................................

பெற்றோர் பெயர்கள்: ..........................................

தொலைபேசி இல: ..........................................

மேற்படி விபரங்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துவதுடன், அத்தாட்சியையும் இணைத்துள்ளேன்.

..........................................

அதிபர் கையொப்பமும் அத்தாட்சி முத்திரையும்

அனுப்ப வேண்டிய முகவரி:

புலமைப்பரிசில்
சித்தியடைந்தோர்,
'விஜய்'
த.பெ.எண் 2037,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்கரியிலிரு

**நிலக்கரி பயன்பாட்டினால் இயங்கும் அனல் மின் நிலையம் குறித்து பலவிதமான செய்திகள் ஊடகங்களில் அவ்வப்போது வெளியாவதனால், அனல் மின் நிலையம் குறித்து நீங்கள் ஓரளவுக்கு அறிந்துவைத்திருப்பீர்கள். அனல் மின் நிலையத்தினால் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுவதாக சூழலியலாளர்கள் கூறுகின்றனர். இன்னொரு தரப்பினரோ, நாட்டில் நிலவும் மின் நெருக்கடியினை சமாளிக்க இவ்வாறான மாற்று வழிகள் பற்றிச் சிந்திக்க வேண்டி இருப்பதாகக் கூறுகின்றனர். இவ்வாறு பெரிதும் பேசப்படுகின்ற அனல் மின் நிலையங்களின் செயற்பாடுகள் பற்றிய சில விபரங்களை இங்கு பார்ப்போம்.**

## எமது நாட்டின் மின்சக்தி

இலங்கை மின்சார சபையின் மின்சக்தி வலையமைப்பானது, நீர் மின்சாரத்திலேயே முழுமையாகத் தங்கியிருந்தது. இதனால், வறட்சிக் காலத்தில் பல சிக்கல்களை எதிர்கொள்ள நேர்ந்தது. எனவேதான் மின் உற்பத்தி தொடர்பில் மாற்று வழிமுறைகள் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. இந்த மாற்று வழிகளில் டீசல் ஊடாக மின்சக்தியை உற்பத்தி செய்வது பிரதான வழிமுறையாகக் கருதப்படுகின்றது. எனினும், நாட்டின் தேவைக்கு ஏற்ப அதிக மின்சாரத்தினை உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. இதனால்தான் அனல் மின் நிலையங்கள் குறித்து இலங்கையிலும் அக்கறை செலுத்தப்பட்டு வருகின்றது.

## நிலக்கரியினால் இயங்கும் அனல் மின் நிலையம்


இன்று உலகில் 60 சதவீதமான மின்சாரம், நிலக்கரியினைப் பயன்படுத்தியே உற்பத்தி செய்யப்படுகின்றது. இதுவே உலகின் பிரதான மின்சார உற்பத்தி வழிமுறையாகும். இன்று உலகில் சனநெரிசல் மிக்க நகரங்களில்கூட அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காகப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பமும் காலத்திற்கு ஏற்ப முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. அந்தவகையில், எமது நாட்டிலும் அனல் மின் நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. நுரைச்சோலையில் அமைந்துள்ள அந்த அனல் மின் நிலையமானது, இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள முதலாவது அனல் மின் நிலையம் ஆகும்.


## அனல் மின் நிலையத்தின் செயற்பாடுகள்

நிலக்கரி மின் உற்பத்தி தொழில்நுட்பக் கோட்பாடு மிகவும் எளிதானது. நிலக்கரியினை தகனம் செய்து நீரை வெப்பமேற்றுவதனூடாக, நீராவியினை உற்பத்தி செய்வதும் அதனை டர்பைன் இயந்திரத்தில் இட்டு சுழற்றுவதும் முதல் படிநிலையாகும். டர்பைன் இயந்திரத்தினை சுழற்றுவதனூடாக மின்சக்தியை உற்பத்தி செய்யும் மின் பிறப்பாக்கியினைச் சுழற்ற முடியும். கியர் வலைத்தொடர்பினூடாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. மின் பிறப்பாக்கியில் சாதாரண டைனமோ கோட்பாடே அமுலாக்கப்படுகின்றது. இவ்வாறே மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகின்றது.

## மின் நிலையத்தினால் ஏற்படும் நெருக்கடிகளும் தீர்வுகளும்

நிலக்கரியினைப் பயன்படுத்தி இயங்கும் அனல் மின் நிலையங்களில் உற்பத்தியாகும் மின் சக்தி குறித்த சித்தாந்தம் மிகவும் எளிமையானது. எனினும், அதனை நடைமுறைப்படுத்தும்போது ப சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்து மின்சக்தி

✱ நிலக்கரியினை முழுமையாகத் தகனம் செய்து, அதனூடாகப் பெறக்கூடிய ஆகக்கூடிய வெப்பத்தினைப் பெறுதல். இங்கு தக[illegible]ாகாத காபன் துணிக்கைகள்


முன்னேற்றமடைந்த தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

✱ மின் நிலையத்திற்கு நிலக்கரியினை எடுத்துவரும் செயற்பாடு தங்கு தடையின்றி தொடர்ச்சியாக

அனல் மின் நிலையங்களினால் காபன் டயொக்சைட் வாயு சுற்றாடலில் மேலதிகமாகச் சேர்கின்றது. காபன் டயொக்சைட்டின் அதிகரிப்பானது, சூழல் வெப்பநிலை அதிகரிப்புக்கு நேரடிக் காரணமாக உள்ளது. இன்று உலகுக்குப் பெரும் அச்சுறுத்தல் தரும்

இந்த தொழில்நுட்பத்தினூடாக பாரியளவிலான அனல் மின் நிலையம் நிர்மாணிக்கப்பட மாட்டாது. சீன எரிசக்தி தொழில்நுட்ப நிறுவனத்தின் (ETIC) கருத் தின்படி, 1000 மெகாவோட்ஸிற்குக் குறைவான மின்சக்தியே இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றது.

இந்தப் புதிய தொழில்நுட்ப நிறுவனம் Clean Cool Centre எனப்படுகின்றது. சர்வதேச எரிசக்தி முகவர் நிலையத்தின் (IEF) புதிய நிலக்கரி தொழில்நுட்பத்தின் அனுசரணையும்




அனல் மின் நிலையத்தின் பிரதான மூலப்பொருள் நிலக்கரியாகும். முதலில் நிலக்கரியில் உள்ள உலோகப் பொருட்கள் அப்புறப்படுத்தப்படும். அதன்பின் அரைத்துத் தூளாக்கப்படும். இவை பெரிய வெப்பத் தாங்கிகளில் நீருடன் சேர்த்து தகனமேற்றப்படும். இவ்வாறு தகனமாக்கும்போது கிடைக்கும் நீராவி, குழாய்களினூடாக டர்பைன் இயந்திரத்திற்கு அனுப்பப்படும். டர்பைனுடன் மின் பிறப்பாக்கி தொடர்புபடுத்தப்பட்டிருக்கும். இங்கு மின்சக்தி உற்பத்தி செய்யப்படும். இது வியப்புக்குரியதொரு தொழில்நுட்ப முறையாகும்.

புகையாக காற்றில் கலப்பதனால், சூழல் மாசடைதலும் ஏற்படுகின்றது. முழுமையான தகனம் இடம்பெறும் வகையிலான தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதனூடாகவே இந்த குறைபாட்டினை நிவர்த்தி செய்ய முடியும். இதனூடாக காபன் மொனொக்சைட் போன்ற சூழலுக்குத் தீமை விளைவிக்கும் வாயுக்கள் வெளியேறுவதனைக் குறைத்துக்கொள்ள முடியும்.

✱ நிலக்கரி தகனத்தினால் பெறப்படும் வெப்ப அளவினை அதிக பட்சம் பயன்படுத்திக்கொள்ளல். தற்போது இயங்கும் அனல் மின் நிலையங்களில் இதற்கான

இடம்பெற வேண்டும். இதனை சிறந்த முறையில் ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதேபோன்று நிலக்கரி தகன செயற்பாடு மாற்றம் இன்றி ஒரே விதத்தில் இயங்க வேண்டும். கழிவுகளை வெளியேற்றுவது தொடர்பான தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

✱ மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தினை சரியான முறையில் விநியோகித்தல். இங்கு மின்சார வலைத்

தொகுதிக்கு ஏற்ற தரத்திற்கு ஏற்ப, மின்சாரத்தினை வெளியிடவேண்டும். மாறுபடும் தேவைகளுக்கு ஏற்ப தானியங்கி முறையில் இயங்கும் தொழில்நுட்ப ஆற்றல் தற்போதுள்ள அனல் மின் நிலையத்தில் உள்ளது.

## மின் நிலையத்தினால் ஏற்படும் சுற்றாடல் பிரச்சினைகளைக் குறைத்தல்

நிலக்கரி அனல் மின் நிலையத்தினை அமைப்பதற்கு முன்னர், அதன் தரம் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். இதற்காக புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவது அவசியமாகும்.

புதிதாக நிர்மாணிக்கப்படும்

வாயுவாக இது உள்ளது. இந்த வாயுவினால் உலக சுற்றாடலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் ஏராளம்.

ஆகவே, நிலக்கரி தகனத்தின் போது வெளியேறக்கூடிய அனைத்து நச்சுவாயுக்களையும் புதிய தொழில்நுட்பத்தினூடாக முழுமையாக அப்புறப்படுத்தப்படுகின்றது. அதற்கமைய,நிலக்கரி தகனத்தின் பின்னர் எஞ்சும் சாம்பலானது, சீமெந்து தொழிற்துறைக்கும் பெருந்தெருக்கள் அமைப்பதற்கும் இதர கட்டட நிர்மாணத் தொழிற்துறைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

விஞ்ஞானிகள் அனல் மின் உற்பத்தியின்போது ஏற்படுகின்ற பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வுகளை முன்வைத்துள்ளனர். பச்சைவீட்டு விளைவு வாயுவை உற்பத்தி செய்வதனைக் குறைத்தல் தொடர்பான ESP தொழில்நுட்பம் இதில் பிரதானமானது. அடியில் தேங்கும் சாம்பலினால் ஏற்படும் சுற்றாடல் பிரச்சினையினைக் குறைக்கும் FGD முறையானது மற்றுமொரு தீர்வாகும். அதே போன்று நைட்ரேட் ஒக்சைட்டினை சூழலில் வெளியேற்றுவதனைக் குறைக்கவும் இதனூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த அனல் மின் நிலையத்திற்குக் கிடைத்துள்ளது. சர்வதேச தர ஆய்வுகளின் அடிப்படையிலேயே இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இங்கு தெரிவாகியுள்ள நாடுகளாக அவுஸ்திரேலியா, ஒஸ்ட்ரியா, கெனடா, டென்மார்க், ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ஜப்பான், நெதர்லாந்து, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா, சுவீடன், ஐக்கிய ராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகியவை உள்ளன.

-பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் தரம்-4

பெயர்: ..........................................................

01)

| | |
|---|---|
| கடல் நீரில் குளித்து | மணலில் கிணறு தோண்டி |
| ஆடி நாமும் மகிழ்ந்து | கடல் நீரை நிரப்பி |
| மணல் வீடு கட்டி | கிணறு அமைத்து |
| ஓடும் நண்டு பிடித்து | சிறுவர் நாமும் மகிழ்வோம் |
| கூடி நாமும் மகிழ்வோம் | |

1. இப்பாடலில் வரும் மாதம் ஒன்று தருக;
   ..........................................................
2. நாம் என்பதன் ஒருமை சொல் எது?
   ..........................................................
3. கடல் என்பதன் ஒத்த சொல் எது?
   ..........................................................
4. இக் கவிதையில் வரும் இரு நீர் நிலைகள் எவை?
   ..........................................................
5. சிறுவர்கள் எவ்வாறு மகிழ்ந்தார்கள்?
   ..........................................................

02) பின்வரும் பழமொழிகளின் கருத்தைத் தருக;

1. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
   ..........................................................
2. ஆழமறியாமல் காலை விடாதே.
   ..........................................................
3. கோபம் பாவத்தைத் தேடும்.
   ..........................................................

03) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. பொற்காலம் : ..........................................
2. தேனமுது: ..........................................
3. கண்ணிமை: ..........................................
4. அறிவாற்றல்: ..........................................

04) பின்வரும் வாக்கியங்களை ஆண்பாலாக்கி வாக்கியம் அமைக்க.

1. அரசி நன்றாகப் பாடினாள்.
   ..........................................................
2. சிறுமி ஓடி விளையாடினாள்.
   ..........................................................
3. மாணவி மேடையை நோக்கிச் சென்றாள்.
   ..........................................................

05) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1. நாமொன்று, தெய்வம், நினைத்தது, ஒன்று, நினைக்கத்
   ..........................................................
2. எலி, வேண்டும், வளை, வளையானாலும், தனி
   ..........................................................

06) பெட்டியினுள் தரப்பட்டுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.

| ல | ன | ளை | ண | லை |
|---|---|---|---|---|

1. பா......ம்
2. பா......வனம்
3. பா......ம்
4. பா......ம்




07) பின்வரும் சொற்களின் இடைவெளியில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

1. செய்ந்ந......றி (ன்,ண்)
2. வா......த்தை (ர், ற்)
3. சித்தி......ம் (ர,ற)
4. வ......தல் (றை, ரை)
5. ப......கை (ல,ள)

08) எதிர்கால வாக்கியமாக எழுதுக.

1. தங்கை அழகான பொம்மை செய்தாள்.
   ..........................................................
2. குழந்தை பாலை உறிஞ்சிக் குடித்தது.
   ..........................................................
3. மரங்கள் காற்றில் அசைந்தாடியது.
   ..........................................................

09) பின்வரும் சொற்களின் பிழையைத் திருத்தி எழுதுக.

1. துரைமுகம் ..........................................
2. எளுதுகிறான் ..........................................
3. பதிநொன்று ..........................................
4. ஏலைகள் ..........................................
5. சென்நெல் ..........................................

10) சுற்றாடலிலுள்ள காடுகளை அழிப்பதால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பாக ஐந்து வாக்கியங்கள் தருக. ஒரு வாக்கியம் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருக்கவேண்டும்.

1. ..........................................................
2. ..........................................................
3. ..........................................................
4. ..........................................................
5. ..........................................................

### விடைகள்

01) 1. ஆடி 2. நான் 3. சமுத்திரம், ஆழி 4. கடல், கிணறு
5. நீரில் குளித்து, மணல் வீடு கட்டி, நண்டுபிடித்து, கிணறு தோண்டி

02) 1. விடா முயற்சி பயன் தரும்.
2. ஒன்றின் இயல்பை அறியாமல் செயற்படக் கூடாது.
3. கோபம் ஒருவனுக்கு தீமையை ஏற்படுத்தும்.

03) 1. பொன்+காலம் 2. தேன்+அமுது
3. கண்+இமை 4. அறிவு+ஆற்றல்

04) 1. அரசன் நன்றாகப் பாடினான்.
2. சிறுவன் ஓடி விளையாடினான்.
3. மாணவன் மேடையை நோக்கிச் சென்றான்.

05) 1. நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது.
2. எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.

06) 1. பாலம் 2. பாலைவனம் 3. பானம் 4. பாணம்

07) 1. செய்ந்நன்றி 2. வார்த்தை 3. சித்திரம்
4. வரைதல் 5. பலகை

08) 1. தங்கை அழகான பொம்மை செய்வாள்.
2. குழந்தை பாலை உறிஞ்சிக் குடிக்கும்.
3. மரங்கள் காற்றில் அசைந்தாடும்.

09) 1. துறைமுகம் 2. எழுதுகிறான் 3. பதினொன்று
4. ஏழைகள் 5. செந்நெல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# அமெரிக்க மத்திய நிலையத்தில் 'சிறுவர் கூடம்' திறந்துவைப்பு

கொழும்பில் உள்ள அமெரிக்க மத்திய நிலையத்தில் அண்மையில் 'சிறுவர் கூடம்' ஒன்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இலங்கைக்கான அமெரிக்க தூதுவரான மிஷெல் ஜே.சிஸன் அவர்களினால் இக்கூடம் திறந்து வைக்கப்பட்டதுடன், ஏராளமான சிறுவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். சிறு பராயத்தினருக்கான பல்வேறு ரகத்திலான ஆங்கில மொழியிலான நூல்கள், சஞ்சிகைகள் இந்த சிறுவர் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், சிறுவர்களுக்கு அமெரிக்க தூதுவரும் அமெரிக்க மத்திய நிலையத்தின் இதர அதிகாரிகளும் பல்வேறு விளக்கங்களை பாச உணர்வோடு விளக்கியதைக் காணமுடிந்தது. இந்த சிறுவர் கூடத்தில் அனைத்து சிறுவர்களும் வருகை தந்து பயன்பெறமுடியும் என்று ஊடக தொடர்பாளர் அருள் ஆரோக்கியநாதன் தெரிவித்துள்ளார்.

(படப்பிடிப்பு: இந்திக)













# 'எனது நாடு'

## ஜப்பான் குமமோத்தோ UNESCO அமைப்பின்

## சிறுவர்களுக்கான சித்திரப் போட்டி 2013

Child art Studio | UNESCO KUMAMOTO | United Nations Educational, Scientific and Cultural Organization

**ஏற்பாட்டாளர்:** குமமோத்தோ UNESCO நிறுவனம் - ஜப்பான்

**பங்குபற்றல்:** சிறுவர் கலை அரங்கு Child art Studio- இலங்கை

**சித்திரத்தின் தொனிப்பொருள்:** எனது நாடு- My Country

சிறுவர்கள் வரையும் சித்திரத்தில் பிரதிபலிக்கப்படும் கலாசாரப் பெறுமதி கொண்ட அனுபவங்களை சர்வதேசப் பிரஜைகளுடன் பரிமாறிக் கொள்வது இந்த போட்டியின் நோக்கமாகும்.

சுற்றாடல் (மனிதர் உட்பட) தொடர்பான உணர்வுபூர்வமான புரிந்துணர்வு கொண்ட தீவிரமான அக்கறையை ஏற்படுத்துவதும், எதிர்கால சந்ததியினருக்குக் கையளிக்கப்படும் இந்த ஈடு இணையற்ற நட்புணர்வின் முக்கியத்துவம் குறித்து உத்வேகத்தை ஏற்படுத்துவதும் இப்போட்டியின் தொனிப் பொருளாக அமைகின்றது.

**நீங்கள் வரையும் சித்திரம்:** அழகிய சுற்றாடலில் நானும் எனது நாடும்/எனது நாட்டைப் பற்றி நான் சிந்திக்கும் விதம்/ மேலும் எனது நாட்டைப் பற்றிய கருத்தினை வெளிப்படுத்தும் விதத்திலும் நீங்கள் விரும்பிய தலைப்பில் சித்திரம் வரையலாம்.

**நாம் எதிர்பார்ப்பது:**

* நவீன முறையில் படைப்புத் திறன் மிக்க தீவிர வெளிப்பாட்டுத் தன்மை கலைத்துவ அடிப்படையில் இருத்தல்.
* வழமையான முறையில் இல்லாமல் புதிய சிந்தனைத் திறனுடன் உங்கள் படைப்பினை பூர்த்தி செய்ய முடியும்.

**ஊடகம்:** சித்திரத்தில் எந்தவொரு வரைதல் ஊடகத்தையும் பயன்படுத்தலாம். கொலாஜ் அல்லது எந்தவொரு கிரஃபிக் ஊடகத்தினாலும் சித்திரம் வரையலாம்.

**உங்களது படைப்பின் நீளம், அகலம்:** 38cm X 54cm

**வயதெல்லை:** 4 முதல் 15 வயதுவரை (2013 ஒக்டோபர் 25 ஆம் திகதிக்குள்)

**பரிசும் விருதும்:** ஜப்பானின் குமமோத்தோ நிறுவனத்தின் தலைவர் விருது, சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் வழங்கப்படும்.

**சிறப்பு:** இரண்டாவது இடத்தைப் பெறும் இருவருக்கு பரிசுகள் வழங்கப்படுவதோடு, அதிசிறப்பு விருதுகள் ஒன்பது மற்றும் முப்பத்தியெட்டு பாராட்டு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். நீங்கள் பெறும் வெற்றிக்கு ஏற்ப அந்த சிறப்பு சித்திரங்கள் ஜப்பானின் குமமோத்தோ UNESCO 2014 கெலண்டரில் சேர்க்கப்படும். அதன் பிரதிகள் உங்களுக்கு வழங்கப்படும்.

**'எனது நாடு' சிறுவர் சித்திரப்போட்டி - 2013**

போட்டியாளர் பெயர்: ..............................

Name in Full: ..............................

(English Capital)

வயது: ..............................

வீட்டு முகவரி: ..............................

..............................

தொலைபேசி இலக்கம்: ..............................

(போட்டி முடிவை அறிவிக்க)

பாடசாலையின் பெயர்: ..............................

பாடசாலை முகவரி: ..............................

மாவட்டம்: ..............................

இந்த படைப்பு மேற்கூறப்பட்ட போட்டியாளரினுடையது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

..............................

சித்திரப்பாட ஆசிரியர்/ஆசிரியை

.................... ....................

அதிபர் திகதி

**இறுதி திகதி:** சித்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதி 2013 ஒக்டோபர் 25. (ஒக்டோபர் 21 முதல் 25 வரை நேரடியாகவும் சித்திரங்களை ஒப்படைக்க முடியும்) சித்திரத்தில் மடிப்பு ஏற்படாதவகையிலும் பழுதுபடாத வகையிலும் உறையில் இட்டு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கையளிக்க முடியும்.

**சித்திரங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**
(இதில் விரும்பிய முகவரிக்கு அனுப்பலாம்)

பணிப்பாளர்,
சிறுவர் கலை அரங்கு,
Child art Studio,
53/7, கிறெகரி வீதி,
கொழும்பு-07

* * *

பணிப்பாளர்,
சிறுவர் கலை அரங்கு,
27/2, குருதெனிய வீதி,
அம்பிட்டிய.

**மேலதிக விபரங்களுக்கு:** 0714820151
(தினமும் மாலை 7 முதல் 10 வரை)

* இந்த சித்திரப் போட்டியில் அதிசிறப்பு விருதைப் பெறும் மாணவ/மாணவியரது பாடசாலைக்கும் விசேட மதிப்பீட்டு சான்றிதழ் வழங்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

ஊடக அனுசரணை: விஜய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5392
அகீலா பானு,
ஹிங்குலோய,
மாவனல்லை.


அங். இல: 5393
த.கெலக்ஷி,
கோயில் வீதி,
கல்முனை-02.


அங். இல: 5394
ஆர்.எஃப்.அஸ்ஸா,
தாழையடி வீதி,
கண்டல்குழி.


அங். இல: 5395
வி.விஷ்ணுகரன்,
கண்டி வீதி,
கிளிநொச்சி.


அங். இல: 5396
ஆர்.எஃப்.றீம்,
மிச் நகர்,
ஏறாவூர்-02.


அங். இல: 5397
எச்.எஃப்.ஹனிஆ,
மதுரன்குளி கனமூலை,
மதீனாபுரம்.


அங். இல: 5398
ஜெமீல் அப்துல்லாஹ்,
மீரா நகர் வீதி,
நிந்தவூர்-11.


அங். இல: 5399
தே.ஜீவசுதர்சன்,
பரிகாரி கண்டல்,
முருங்கன்.


அங். இல: 5400
எஸ்.அபிலாஷ்,
பன்சல வீதி,
பண்டாரவளை.


அங். இல: 5401
நி.றீமா தஸ்னிம்,
சுக்கூர் ஆசிரியர் வீதி,
கிண்ணியா-06.



அங். இல: 5402
அப்துல் ஹாலிக்,
பழைய வீதி,
காத்தான்குடி-01.


அங். இல: 5403
நிலாருத்தீன்,
பம்மன்ன,
நாரங்கொட.

# தெரிந்து கொள்வோம்




* **தென் அமெரிக்காவில் சிலி, ஈக்வடோர் ஆகிய நாடுகளைத் தவிர, ஏனைய தெ.அமெரிக்கக் கண்ட நாடுகளை எல்லையாகக்கொண்ட நாடு எது?**
  பிரேசில்
* **நாடுகளின் பெயரையே தலைநகரங்களாகக்கொண்ட உலக நாடுகள் மூன்றைத் தருக?**
  பிரசீலியா, சிங்கப்பூர், டியுனீஷியா



* **உலகத் தலைவர்களின் பெயர்களை அந்நாட்டின் தலைநகரங்களுக்கு வைத்துள்ள நாடுகள் இரண்டைத் தருக?**
  i. வொஷிங்டன் - ஐக்கிய அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி (1791)
  ii. ஹொ (ச்)சி மின்ஹ் வியட்நாமின் தலைநகர் (தற்போதைய தலைநகர் ஹனோய்)



* **'ஒலிவர் க்ரோம்வெல்' பிரித்தானிய வரலாற்றில் எதனால் முக்கியத்துவம் பெறுகின்றார்?**
  1749 இல் இங்கிலாந்து நாடாளுமன்றம் சார்பான படைகளை ஒன்றுதிரட்டி மன்னராட்சிக்கெதிராக போரிட்டு வெற்றி பெற்றவர். வரம்புடைய முடியாட்சியை தாபித்தவர்



* **'ஷா' மன்னர்களின் ஆட்சி எப்போது, யாரால் ஒழிக்கப்பட்டது?**
  1979 இல் ஈரானில் ஷா மன்னர்களின் ஆட்சியை அயடொல்லாஹ் கொமெய்னி ஒழித்தார்.
* **வட மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் ஆவார். வட மாகாண ஆளுநர் யார்?**
  மேஜர் ஜெனரல் சந்திரசிரி
* **இலங்கையர் ஒருவர் வெளிநாட்டில் ஆற்றும் சிறந்த சேவைக்காக வழங்கப்படும் உயர் விருது எது?**
  ஸ்ரீலங்கா ரத்னா

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

## துஷாரா கலைவட்டம் - 2013

## எக்ரோன் அகில இலங்கை சித்திரப்போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)**

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, பிலிந்து பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப்போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்கள் வருமாறு:

**போட்டி விதிமுறைகள்**

* அளவு - அங்குலம் 14×18 அளவு
* வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் இதில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
* தலைப்பு - எந்தவொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
* ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
* பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**இவற்றை வெல்லுங்கள்**
வெற்றிக் கிண்ணங்கள் - 68
தங்கப் பதக்கங்கள் - 188
வெள்ளிப் பதக்கங்கள் - 15
வெண்கலப் பதக்கங்கள் - 15
பரிசு/சான்றிதழ்கள் - 5000

**போட்டிப் பிரிவுகள்**

* முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
* பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
* பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் கீழ்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின், அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை) | | |
|---|---|---|
| முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை) | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர் | தெரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர் | பிரிவுக்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron விசேட வெற்றியாளர்கள் 150 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron சான்றிதழ் பெறுவோர் 400 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |
| திறமைச்சான்றிதழ் 2000 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |

Acron லேபிள் ஒட்டப்பட்ட மாணவர்களின் 100 சித்திரங்களை ஒன்றாக சேர்த்து அனுப்புகின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.
(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)
சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.
வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான மண்டபங்கள் இரண்டிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன், குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் வைத்து வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி: 2013 ஒக்டோபர் 30.**

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு** - 011 4962520, 0714483704. மேலதிக விபரங்களுக்கு 'விஜய்' பத்திரிகையைப் பார்க்கவும்.

## துஷாரா கலைவட்டம்

THUSHARA KALAKAVAYA

அகில இலங்கை சித்திரப்போட்டி-2013

Acron All Island Art Competition

விண்ணப்பப்படிவம் Application Form

போட்டியாளரின் பெயர்:
Applicant's Name :

முன்பள்ளி/பாடசாலை/பல்கலைக்கழகம்/பகிரங்க :
Pre School, Schools, University & Open Category :

பிறந்த திகதி:
Date of Birth :

ஆண்/பெண்
Sex : பெண் Female ☐ ஆண் Male ☐

வீட்டு முகவரி:
Personal Address :

தொலைபேசி இல:
Telephone :

வகுப்பு:
Grade :

சித்திரத்தின் தலைப்பு:
Topic :

பாவித்துள்ள வர்ணம்:
Medium of Expression
Oil, Water color, Poster CLR, Pastels :

போட்டியாளரின் கையொப்பம் Applicant's Signature | திகதி Date | பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் Parents/Guardians Signature

பிரதான அனுசரணை: Acron
ஊடக அனுசரணை:

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Firefox இயங்குதளத்தில் இயங்கும் Smartphone கள்



Smartphone சந்தையில் பல்வேறு இயங்குதளங்கள் இன்று தமக்குள் பலத்த போட்டியில் உள்ளன. இவற்றுள் iOS, Android, Windows ஆகிய இயங்குதளங்களைப் பிரதானமாகக் குறிப்பிடலாம். போட்டி நிலைமை காரணமாக, குறித்த இயங்குதளங்களின் புதிய பதிப்புகளும் அவ்வப்போது வெளியிடப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இணையப் பாவனை தொடர்பில் பாவனையாளர்களுக்கு உச்சக்கட்ட அனுபவத்தினை வழங்கும் வகையில் Firefox நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள 'Firefox OS' எனப்படும் இயங்குதளத்தினைக் கொண்டுள்ள Smartphone கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

'ZTE Open' எனப் பெயரிடப்பட்டுள்ள குறித்த Smartphone கள், செம்மஞ்சள் நிறத்தில் காணப்படுவதுடன், உலகின் எந்தவொரு தொலைத்தொடர்புச் சேவையிலும் பயன்படுத்தத்தக்க வகையிலேயே காணப்படும் (unlocked) எனத் தெரிவிக்கப் படுகின்றது.

ZTE நிறுவனத்தினாலேயே குறித்த Smartphone கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. குறித்த இயங்குதளமானது, சாதாரண இயங்குதளங்களில் காணப்படுகின்ற அடிப்படை வசதிகளையும் தன்னகத்தே கொண்டு காணப்படும். அத்துடன், மேலதிக Application களை



பாவனையாளர்கள் பயன்படுத்த விரும்புமிடத்து, குறித்த Application களை Firefox Marketplace இலிருந்து பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக்கொள்ள முடியும்.

குறித்த Smartphone கள் கடந்த ஜூலை மாதமளவில் ஸ்பெயினில் விற்பனைக்கு விடப்பட்டிருந்தன. இந்நிலையில், ஏனைய மக்களும் குறித்த Smartphone களைக் கொள்வனவு செய்யும் வகையில் eBay இணையத்தளம் மூலம் அவை விற்பனை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இது விற்பனைக்கென நிரற்படுத்தப்படவுள்ள திகதிகள் குறித்து எதுவித அறிவித்தல்களும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குருக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.



எஸ்.பிரதீப்





# அழுத்தமான வேலைகளுக்கிடையே பறவைகளின் சங்கீதம் கேட்டு உற்சாகமடைவோம்!



மணிக்கணக்காக கணினியின் முன் அமர்ந்து, இடைவிடாமல் வேலை செய்ய வேண்டியிருப்பவர்கள் சற்று ரிலாக்ஸ் செய்துகொள்ள உதவும் வகையிலான இதமான வழியை 'birdsong.fm' என்ற இணையத்தளம் வழங்குகிறது.

கணினியில் நீங்கள் வேலை செய்து கொண்டிருக்கும்போது, எப்போது உங்களுக்கு சோர்வு ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் இந்தத் தளத்தின் பக்கம் போனால் போதும்; பின்னணியில் இனிமையான பறவைகளின் சங்கீதத்தைக் கேட்டு ரசிக்கலாம். அப்படியே உங்களைப் புத்துணர்ச்சியாக்கிக்கொள்ளலாம். இந்த உணர்வு தரும் உற்சாகத்தோடு மீண்டும் பணியில் மூழ்கலாம்.

இயற்கை எழில் கொஞ்சும் பின்னணியோடு, காட்சிதரும் இந்தத் தளத்தில் பல வசதிகள் இருக்கின்றன. இந்தத் தளத்தில் உறுப்பினராகச் சேர்ந்தால், பறவைகள் ஒலிகளுக்கான பிரத்தியேகக் கூட்டில் இருந்து ஒலிகளைப் பெறமுடியும். இந்த ஒலிகளை mp3 கோப்புகளாகவும் தரவிறக்கம் செய்துகொள்ளலாம். அவ்வாறே Smartphone களுக்கான செயலியாகவும் தரவிறக்கம் செய்யலாம். iTunes, Sound Cloud போன்ற சேவைகள் வாயிலாகவும் பறவைகளின் சங்கீதத்தைக் கேட்க முடியும். நீங்களும் http://birdsong.fm/ எனும் இணையத்தளத்திற்குச் சென்று பறவைகளின் பாடல்களைக் கேட்டு ரசித்திடுங்கள்.

இங்கே வெட்டவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LG யின் 'G Pad 8.3'







LG நிறுவனமானது, தனது புத்தம் புதிய உற்பத்தியான 'G Pad 8.3' கைக்கணியை (tablet) இந்த வருடம் இடம்பெறவுள்ள IFA நிகழ்வில் அறிமுகம் செய்யவுள்ளது.

8.3 அங்குல அளவு மற்றும் 1920x1200 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்ட இச்சாதனமானது, 1.7GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Processor மற்றும் 2GB RAM ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. Google இன் Android 4.2.2 Jelly Bean இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இச்சாதனம், 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமரா, 1.3 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கெமரா என்பனவற்றுடன் 4,600 mAh உடைய நீடித்து உழைக்கும் மின்கலத்தினையும் கொண்டுள்ளது.



இதன் சேமிப்பு நினைவகமாக 16GB கொள்ளளவும் தரப்பட்டுள்ளது. இந்தச் சாதனமானது, மிக விரைவில் ஆசியாவிலும் விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.






# அதிவேகமான மெமரி கார்ட்



'SanDisk Extreme Pro CFast 2.0' எனும் புத்தம் புதிய மெமரி கார்ட் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. CompactFlash நிறுவனமானது, கடந்த வருடம் CFast 2.0 மெமரி கார்ட் தொடர்பான அறிவித்தல் ஒன்றினை வெளியிட்டிருந்தது. அது இப்போது அறிமுகமாகியிருக்கிறது. இந்த மெமரி கார்ட் ஆனது, உலகின் வேகம் கூடிய செய்திப் பரிமாற்றம் கொண்டதாகக் காணப்படுகின்றது.



SanDisk நிறுவனத்தின் இந்த Extreme Pro CFast 2.0 மெமரி கார்ட்டிலிருந்து 100 GB அளவான செய்திகளைப் பரிமாற்றம் செய்வதற்கு நான்கு நிமிடங்கள் மட்டுமே எடுக்கும். 450 MB/s எனும் வேகத்தில் படிக்கக்கூடிய மற்றும் 350MB/s எனும் வேகத்தில் எழுதக்கூடிய திறனை இது கொண்டுள்ளது.




256GB சேமிப்பு கொள்ளளவு உடைய CFast 2.0 மெமரி கார்ட்டின் விலையானது, 1,809 டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் புதிய SandDisk CFast 2.0 மெமரி கார்ட், இப்போது அமெரிக்கா, ஐரோப்பா நாடுகள் உட்பட அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களில் 60GB மற்றும் 120GB அளவுகளில் கிடைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12



# உடலில் அணிந்து பயன்படுத்தக்கூடிய Smart HD Camera



கழுத்து மற்றும் இடுப்புப்பட்டி போன்றவற்றில் அணிந்து பயன்படுத்தக்கூடிய சிறிய ரக Smart HD Camera ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

'ParaShoot 2.0' எனப்படும் இக்கெமரா ஆனது, 45x45x15 மில்லிமீற்றர் கன பரிமாணத்தைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் எடை 1.3 அவுன்ஸ் ஆகவும் 100 பாகை பார்வைக்கோணத்தைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

இவை தவிர, சேமிப்பு நினைவகமாக 16GB கொள்ளளவும் தரப்பட்டுள்ளது.






**அன்பு வாசகர்களே...!**

'நுட்பம்' பகுதியில் வெளியாகும் தகவல்கள் குறித்து உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். அத்துடன், இப்பகுதியூடாக நீங்கள் மேலதிகமாக அறிய விரும்புகின்ற கணினி சார்ந்த விடயங்கள் குறித்தும் எமக்கு அறியத்தாருங்கள். nutpamvijey@gmail.com எனும் மின்னஞ்சலூடாக, உங்கள் கருத்துக்களையும் நீங்கள் அறிய விரும்பும் விடயங்களையும் இன்றே முன்வையுங்கள்.





# சைக்கிள் + மோட்டார் சைக்கிள்

உங்கள் தேவைக்கேற்ப சைக்கிளாகவோ அல்லது மோட்டார் சைக்கிளாகவோ பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வாகனம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. Rimac எனும் நிறுவனமே இதனைத் தயாரித்துள்ளது. இதற்கு 'Greyp G12' என்று பெயரிடப்பட்டுள்ளது. மணிக்கு 65 கிலோ மீற்றர் வேகத்தில் இதில் பயணம் செய்யலாம். அதற்காக இந்த சைக்கிளில் விசேட மோட்டார் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. அத்துடன், உங்கள் தேவைக்கு ஏற்ப வேகத்தைக் கூட்டிக் குறைக்கக்கூடிய வகையில் speed control வசதியும் உள்ளது.

இதில் காணப்படும் மின்கலமானது, ஒருமுறை மின்னேற்றப்படுவதன்மூலம் 120 கிலோமீற்றர் தூரம் பயணிக்கக்கூடிய சக்தியை வழங்குகின்றது.

# தங்க நிறத்தில் அறிமுகமாகும் Samsung galaxy s4

Samsung நிறுவனமானது, தங்க நிறத்தில் 'Samsung galaxy s4' இனை அதன் ஒரு சிறப்பு வெளியீடாக அறிமுகப்படுத்தியுள்ளது. 'தங்க பிரவுன்' அல்லது 'தங்க பிங்க்' எனும் இரண்டு வர்ணங்களில் இந்த ஃபோன்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய, பிங்க் மற்றும் பிரவுன் நிறத்திலான ஃபோன்களில் தங்க நிறத்தில் பின் தகடு அமைந்துள்ளது.





இதன் விலை மற்றும் இது பரவலாகக் கிடைக்கக்கூடிய இடங்கள் பற்றிய தகவல்களை Samsung நிறுவனம் வெளியிடவில்லை. இவை தற்போது ஐக்கிய அரபு ராச்சியத்தில் மட்டும் கிடைக்கும் என்று அறியக்கிடைக்கிறது. மத்திய கிழக்குச் சந்தைகளில் விற்பனை செய்வதை இலக்காகக் கொண்டே இது வெளியிடப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# கூகிளின் சுடுகாடு!!!

தொழில்நுட்ப உலகில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு நிறுவனமாக Google நிறுவனம் உள்ளது. கூகிளின் சேவைகள் பல உள்ளன. பல சேவைகளை உருவாக்கியது போலவே, கூகிள் நிறுவனம் பல சேவைகளை நிறுத்தியும் உள்ளது. அண்மையில்கூட ஜூலை 1], கூகிள் ரீடர் சேவை நிறுத்தப்பட்டது. கூகிளின் நிறுத்தப்பட்ட சேவைகளை வர்ணனையாளர்கள் 'கூகிள் சுடுகாடு' (Google Graveyard) என்று வர்ணிக்கின்றனர். இந்த சுடுகாட்டில் புதிதாக புதைக்கப்பட்டிருப்பது 'கூகிள் ரீடர்' ஆகும். கூகிள் நிறுவனம் இதுவரை ஆரம்பித்து நிறுத்திய சேவைகளைக் கணக்கிட்டால், அதன் எண்ணிக்கை 20 ஆக உயர்கிறது. ஆகவே, கூகிள் நிறுத்திய சேவைகள் பற்றி நோக்குவோம்.






**Google Answers:** இதில் பயனாளர்கள் தங்கள் கேள்விகளுக்கு விடை வேண்டும் என்றால், அதற்குப் பணம் செலுத்த வேண்டும். ஆனால், பயனாளர்களோ இலவச சேவையையே விரும்பினர். இதனால், 2006 டிசம்பரில் இந்த சேவை நிறுத்தப்பட்டது.

**Google Zeitgeist:** பிரபலமாகத் தேடப்படும் கேள்விகளின் தொகுப்பாகும். இதில் கேள்விகளின் தொகுப்பானது வாரம், மாதம், ஆண்டு வாரியாக இருக்கும். இந்த சேவை மே 2007 இல் நிறுத்தப்பட்டது.

**Google Page Creator:** இதில் ஒரு வெப்சைட்டை உருவாக்கலாம். இந்த சேவை 2008 இல் நிறுத்தப்பட்டது.

**Google Lively:** எனிமேஷனில் Chat செய்யும் சேவையாகும். இது 6 மாதங்கள் மட்டுமே சேவையில் இருந்தது. 2008 டிசம்பரில் நிறுத்தப்பட்டது.

**Jaiku:** twitter ஐப் போன்ற Microblogging சேவை ஆகும். 2009 இல் நிறுத்தப்பட்டது.

**Dodgeball:** Google நிறுவனம் இந்த மொபைல் நெட்வர்க்கிங் சேவையை 2005 இல் வாங்கியது. பின்னர் 2009 இல் இதை நிறுத்தி விட்டு, Google latitude என மாற்று சேவையை ஆரம்பித்தது.

**Google Search Wiki:** இதில் log in செய்து பயனாளர்கள் Search result வரிசையை மாற்றிக்கொள்ளலாம். இது 2010 மார்ச் மாதம் நிறுத்தப்பட்டது.

**Google wave:** மின்னஞ்சல், சமூக வலைத்தளம் போன்றவற்றை edit செய்ய உதவும் framework போன்றதே இந்த Google wave. இது 2010 ஒகஸ்ட்டில் நிறுத்தப்பட்டது.



**Google labs:** இதில் உள்ள project களை பயனாளர்கள் பரிசோதனை செய்து தங்கள் கருத்துகளைப் பதிவு செய்யலாம். இது 2011 ஜூலை மாதம் நிறுத்தப்பட்டது.

**Google Dictionary:** இதுவொரு Online dictionary சேவையாகும். 2011 ஒகஸ்ட்டில் நிறுத்தப்பட்டது.

**Google Notebook:** Online இல் தகவல்களைச் சேமித்து வைக்க உதவும் ஒரு சேவை. இந்த சேவை 2011 மார்ச் இல் நிறுத்தப்பட்டது.

**Sidewiki:** பயனாளர்கள் வலைதளங்களில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள உதவும் ஒரு உலாவி. 2011 செப்டெம்பரில் பாவனையிலிருந்து நிறுத்தப்பட்டது.

**Aardvark:** சமூக தேடுதல் சேவை ஆகும். இதில் live chat செய்யலாம். 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சேவையானது, 2011 செப்டெம்பரில் நிறுத்தப்பட்டது.

**Google buzz:** இது Gmail இல் இணைக்கப்பட்ட Microblogging மற்றும் messaging சேவை ஆகும். இது 2011 டிசம்பர் 15 இல் நிறுத்தப்பட்டது.

**Picnik:** இதுவொரு Online photo editor சேவையாகும். 2012 ஏப்ரல் 19 இல் நிறுத்தப்பட்டது.


**Knol:** விக்கிப்பீடியாவுக்குப் போட்டியாக ஆரம்பிக்கப்பட்ட Knol, 2012 ஒக்டோபர் 1 இல் நிறுத்தப்பட்டது.

**Google Health:** உடல் ஆரோக்கியத்தைப் பற்றிப் பகிர்ந்துகொள்ள உதவும் ஒரு சேவை ஆகும். இது 2013 ஜனவரி 1 ஆம் திகதி நிறுத்தப்பட்டது.

**Google Talk:** இது கூகிள் Talk Voice மற்றும் Message தொடர்பு சேவையாகும். 2013 மே 15 இல் நிறுத்தப்பட்டு, Google Hangouts என மாற்றப்பட்டது.

**Google Reader:** இச்சேவையானது, 2013 ஜூலை 1 ஆம் திகதி நிறுத்தப்பட்டது.

**iGoogle:** 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சேவை, 2013 நொவெம்பர் மாதம் நிறுத்தப்படவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

# வெகுசன ஊடகமும் சமூகத் தாக்கங்களும்


ஊடக பாடநெறி 55

வெகுசன தொடர்பு பெருநிலைப்பட்ட மக்களுடனும், சமூகத் தொகுதியுடனும் தொடர்புபட்டமைவதால், அவற்றின் சாதக-பாதக நிலைகளை உணரக்கூடியதாகவுள்ளது. வெகுசன ஊடக செய்தி திறந்து விடப்படுவதால் சமூகத்தின் மத்தியில் அதன் தாக்கம் பாரியளவில் உணரப்படுகின்றது. வெகுசன ஊடகத்தின் சமூக தாக்கமானது, இரு பக்கங்களை கொண்டமைந்துள்ளது. ஒரு பக்கம் மகிழ்ச்சி, மறுபக்கம் துக்கம் என்ற அடிப்படையை உணர்த்துவதாக அது அமைகின்றது.

* தகவல் பரிமாற்ற செயன்முறை.
* சமூக மயமாக்கல் செயன்முறை.
* அறிவூட்டல் தொழிற்பாடு.
* சமூக படிமம் அல்லது சமூக விம்பங்களை உருவாக்குதல்.
* சமூக இருப்பு மற்றும் சமூக நவீனமயமாக்கல் செயன்முறைக்கு விழிப்புணர்வூட்டல்
* பயனுள்ள பொழுதுபோக்குகளை ஏற்படுத்தல்.
* அழகியல் ரசனை மேம்பாடுகள்.




செயற்பாடுகள் என மேற்கூறப்பட்டுள்ள அடிப்படைகள் நன்மைக்கான எடுத்துக்காட்டுக்களாக அமைகின்ற அதேவேளை, பின்வரும் பாதிப்புக்களை சமூகம், தனிநபர் என்ற அடிப்படையில் ஏற்படுத்தப்படுவதையும் உணரக்கூடியதாக உள்ளது.



* நாளாந்த நேர அட்டவணையை தீர்மானிக்கும் காரணியாகவும், மாற்றத்திற்குட்படுத்தும் சக்தியாகவும் வெகுசன ஊடகங்கள் செயற்படுதல்.
* பெருந்திரள் மக்களிடையே வன்முறை எண்ணக்கரு சார்ந்த படிமங்களை உருவாக்குவதிலும், தூண்டுவதிலும் வெகுசன ஊடகங்கள் பங்காற்றுதல்.
* பயனுள்ள பொழுதுபோக்குகளான விளையாட்டு, வாசிப்பு போன்ற கருமங்கள் சமூகத்தில் அருகிவருதல்.


உடல், உள, சமூக ஆரோக்கிய நிலைகள் பாதிப்படைதலும், தனிமனித ஆசைகளுக்கும் உணர்வுகளுக்கும் விருந்தளிக்கும் பண்டமாகவும், வடிகாலாகவும் ஊடகங்கள் செயற்படுதலாலும் செயலூக்கமற்ற அகப்புற சூழ்நிலைகள் உருவாக்கப்படுகின்றன. மேலும், சுயசிந்தனை கட்டுப்படுத்தப்படுதல், இதனால் செயல்நிலைகள் குறைவடைதல். ஊடக வழி மூலமான கலாசார திணிப்பு, வெகுசன ஊடகமொழிப் பிரயோகங்கள் சுதேச மொழிப் பிரயோக நிலைகளுக்கு சவாலாக அமைகின்றன. அத்துடன், வெகுசன தொடர்புகள் காரணமாக, தனிமனித செய்தித் தொடர்புகளும் குறைவடைகின்றன. (தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## தளிர்கரம்




பச்சை நிறத்திலுள்ள உருக்களைச் சுற்றி வட்டமிடுக.





நிறங்களை அறிவோம்.

வித்தியாசமான உருக்களின் கீழ்க் கீறிடுக.



எத்தனை Angry Birds உள்ளன என்பதை கீறிட்ட இடத்தில் எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மா-மகன்-அப்பா ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

පුතා: **අම්මේ! මට සල්ලි දෙනවාද?**
அம்மே! மட்ட சல்லி தெனவாத?
மகன்: **அம்மா! எனக்குப் பணம் தருகிறீர்களா?**

අම්මා: **ආ.. පුතා, තාත්තාගෙන් ඉල්ල ගන්න.**
ஆ... புதா, தாத்தாகென் இல்ல கன்ன.
அம்மா: **ஆ... மகன், அப்பாவிடம் வாங்கிக்கொள்ளுங்கள்.**

පුතා: **අනේ අම්මා, ඔයා ඉල්ලලා දෙන්නකෝ.**
அனே அம்மா, ஒயா இல்லலா தென்னகோ.
மகன்: **ஐயோ அம்மா, நீங்கள் வாங்கித் தாருங்கள்.**

**அப்பாவிடம் சென்று...**

අම්මා: **අද පුතාගේ පාසලේ පොත් ප්‍රදර්ශනයක් තියෙනවාලු. එයාට පොත් ගන්න සල්ලි ටිකක් ඉල්ලනවා.**
அத புதாகே பாசலே பொத் ப்ரதர்ஷனயக் தியனவாலு.
எயாட்ட பொத் கன்ன சல்லி டிகக் இல்லனவா.
அம்மா: **இன்று மகனுடைய பாடசாலையில் புத்தகக் கண்காட்சி ஒன்று இருக்கிறதாம். அவனுக்குப் புத்தகம் வாங்க காசு கொஞ்சம் வேண்டுமாம்.**

තාත්තා: **පොත් ප්‍රදර්ශනයක්? කව්ද පවත්වන්නේ?**
பொத் ப்ரதர்ஷனயக்? கவ்த பவத்வன்னே?
அப்பா: **புத்தகக் கண்காட்சியா? யாரால் நடாத்தப்படுகின்றது?**

පුතා: **හපනා පොත් මැදුරෙන් තාත්තේ.**
ஹபனா பொத் மெதுரென் தாத்தே.
மகன்: **ஹபனா புத்தகசாலையினால் அப்பா.**

තාත්තා: **ආ.. හපනා එකේ පොත් හොඳයි. පුතා මොනවද ගන්න පොත්?**
ஆ... ஹபனா எகே பொத் ஹொந்தய்.
புதா மொனவத கன்ன பொத்?
அப்பா: **ஆ... ஹபனா புத்தகங்கள் நல்லவை. மகன் என்ன புத்தகங்கள் வாங்கப் போகிறீர்கள்?**

පුතා: **සිංහල රචනා පොතකුයි දෙමළ-සිංහල පොතකුයි.**
சிங்கள ரச்சனா பொதகுய் தெமள-சிங்கள பொதகுய்.
மகன்: **சிங்களக் கட்டுரைப் புத்தகம் ஒன்றும் தமிழ்-சிங்களப் புத்தகம் ஒன்றும்.**

තාත්තා: **මෙන්න පුතා රුපියල් 1000ක් තියෙනවා. පුතා බලලා නංගිටත් හොඳ රචනා පොතක් ගේන්න.**
மென்ன புதா ருபியல் 1000 க் தியெனவா.
புதா பலலா நங்கிடத் ஹொந்த ரச்சனா பொதக் கேன்ன.
அப்பா: **இந்தாருங்கள் மகன் 1000 ரூபாய் இருக்கிறது. மகன் பார்த்து தங்கச்சிக்கும் ஒரு நல்ல கட்டுரைப் புத்தகம் வாங்குங்கள்.**

පුතා: **හොඳයි තාත්තේ, මම ගේන්නම්.**
ஹொந்தய் தாத்தே, மம கேன்னம்.
மகன்: **நல்லது அப்பா, நான் கொண்டு வருகிறேன்.**



### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. **පාසලේ පොත් .............. තියෙනවාලු.**
2. **හපනා එකේ .............. හොඳයි.**
3. **හොඳ .............. පොතක් ගේන්න.**




இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற வினா (Interrogative) வாக்கியங்கள், உடன்பாடு (Affirmative) வாக்கியங்கள் மற்றும் எதிர்மறை (Negative) வாக்கியங்கள் ஆகிய மூன்றையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) நீ நேற்று பாடசாலைக்குப் போனாயா?
Did you go to school yesterday?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஆ) ஆம், நான் நேற்று பாடசாலைக்குப் போனேன்.
Yes, I went to school yesterday.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(இ) இல்லை, நான் நேற்று பாடசாலைக்குப் போகவில்லை.
No, I did not go to school yesterday.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

* Did you go? (Interrogative)
நீ போனாயா? (வினா)
* Yes, I went. (Affirmative)
ஆம், நான் போனேன். (உடன்பாடு)
* No, I didn't go. (Negative)
இல்லை, நான் போகவில்லை. (எதிர்மறை)

(ஈ) நீ நேற்று எனது வீட்டுக்கு வந்தாயா?
Did you come to my house yesterday?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(உ) ஆம், நான் நேற்று உனது வீட்டுக்கு வந்தேன்.
Yes, I came to your house yesterday.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) இல்லை, நான் நேற்று உனது வீட்டுக்கு வரவில்லை.
No, I did not come to your house yesterday.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

* Did you come? (Interrogative)
நீ வந்தாயா? (வினா)
* Yes, I came. (Affirmative)
ஆம், நான் வந்தேன். (உடன்பாடு)
* No, I didn't come. (Negative)
இல்லை, நான் வரவில்லை. (எதிர்மறை)

(எ) அவர்கள் தமது இரவுணவை சாப்பிட்டார்களா?
Did they eat their dinner?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஏ) ஆம், அவர்கள் தமது இரவுணவை சாப்பிட்டார்கள்.
Yes, they ate their dinner.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஐ) இல்லை, அவர்கள் தமது இரவுணவை சாப்பிடவில்லை.
No, they did not eat their dinner.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவில் தரையிறங்கிய இரண்டாவது மனிதன்


44 ஆண்டுகளுக்கு முன்னர் நிலவில் தரை இறங்க முற்பட்டபோது நீலும் அவரும் எதிர்கொண்ட மயிர்க்கூச் செறியும் நிகழ்வுகளை ஒல்ட்ரின் விளக்கினார். ஒல்ட்ரின் நிலவில் தரையிறங்கியபோது புகைப்படம் எடுத்தவர் நீல் ஆம்ஸ்ட்ரோங்.

**தொலைக்காட்சி நேர்காணல்களில் உலகப்புகழ் பெற்ற ஊடகவியலாளரும் நடிகரும் எழுத்தாளருமான சேர்.டேவிட் ஃப்ரொஸ்ட், நிலவில் தரை இறங்கிய இரண்டாவது மனிதனான எட்வின் ஒல்ட்ரின் அவர்களுடன் அல்-ஜெசீரா தொலைக்காட்சிக்கான ஒரு நேர்காணலை நடத்தினார்.**

மனிதன் நிலவில் காலடி எடுத்து வைத்து 44 ஆண்டுகள் பூர்த்தியடைந்தமையை முன்னிட்டே இந்த நேர்காணல் இடம்பெற்றது. முதன்முதல் நிலவுக்கு காலடி எடுத்து வைத்த இருவரில் உயிருடன் இருப்பவர் ஒல்ட்ரின் மட்டுமே.


டேவிட் ஃபுரொஸ்ட் (இடது) எட்விட் ஒல்ட்ரினுடன் நடத்திய நேர்காணல்.

44 ஆண்டுகளுக்கு முன்னர் நிலவின்மீது தரை இறங்கிய அந்த தருணங்களை நினைவு கூர்ந்த ஒல்ட்ரின், அத்தருணத்தில் வியப்பைவிட மனதில் இனம்புரியாத அச்ச உணர்வு ஏற்பட்டதாகத் தெரிவித்தார். நீலும் தானும் எதிர்கொண்ட மிகவும் சாகச பூர்வமான ஒரு சந்தர்ப்பமாக அதனை அவர் நினைவுகூர்ந்தார். நாம் தரை இறங்குவதற்கு பொருத்தமான இடத்தை தேடிக்கொண்டிருக்கும்போது விண்வெளி ஓடத்தில் எரிபொருள் முடிவடைய ஒரு சில நிமிடங்களே எஞ்சியிருந்தன. அதிர்ஷ்டவசமாக எமக்கு தரை இறங்குவதற்கு பொருத்தமான இடம் ஒன்று கிடைத்தது.

நிலவின்மீது முதன்முதல் காலடி வைத்த நீல் ஆம்ஸ்ட்ரோங், "இது மனிதன் முன் வைத்த ஓர் அடி மட்டுமே. ஆனால், மனித குலத்தின் இராட்சதப் பாய்ச்சல்" என்று உலகப் புகழ் பெற்ற கூற்றைக் கூறினார். இந்த கூற்றை நீல் முன்னரே தயாரித்து வைத்து கூறினாரா? என்று நேர்காண்பவர் ஒல்ட்ரினிடம் வினவினார். அத்தருணத்திற்கு உகந்த ஒரு கூற்றை விடுப்பதற்கும் அது எவ்வாறு இருக்க வேண்டும் என்று சிந்தித்து கூற்றை மனத்தில் இருத்திக்கொள்ளவும் போதியளவு கால அவகாசம் இருந்ததாக அவர் கூறினார்.

இந்த நேர்காணல் நிகழ்ச்சியில் நிலவில் காலடி வைத்தது தொடர்பான ஒல்ட்ரினின் விபரிப்பு உரையும் இடம்பெற்றது. இதனைத்தவிர, முன்னெப்போதும் காண்பிக்கப் படாத காட்சிகளும் இந்த நேர்காணலில் காட்டப்பட்டன. அந்த காட்சியானது, 1950 களில் ஒல்ட்ரின் கொரிய தீபகற்ப யுத்தத்தின்போது, தாக்குதல் விமானம் ஓட்டுநராக செயற்படும்போது கெமராவில் பதியப்பட்ட காட்சியாகும். அதன் விபர உரையினை ஒல்ட்ரினே நிகழ்த்தினார். தாக்குதல் விமானம் ஒன்றில் கெமரா பொருத்தப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவே எனலாம்.

1930 இல் பிறந்த ஒல்ட்ரின், 21 வயதில் விமான ஓட்டுநரானார். கொரிய தீபகற்ப யுத்தத்தின்போது தாக்குதல் விமான ஓட்டியாக பணியாற்றினார். எதிராளிகளின் விமானங்கள் மீது நடத்திய தாக்குதல் குறித்தும் அந்த நேர்காணலில் அவர் குறிப்பிட்டிருந்தார். அவற்றை நிரூபிக்கும் பதிவு செய்யப்பட்ட காட்சிகள் அவரிடம் இருந்தன.



ஒல்ட்ரின் நிலவில் தரையிறங்குவதற்கு முன்னர் உப விண்கலத்தில் இருந்து எடுத்த புகைப்படம். அவர் நிலவில் பதிந்த தனது காலடியையும் புகைப்படம் எடுத்தார். இன்று அது மனித குலத்தின் விண்வெளிப் பயணத்தினை அடையாளப்படுத்தும் அடையாளமாக உள்ளது

அவர் தனது கலாநிதிப் பட்டத்திற்காக எழுதிய 'விண்வெளியில் சந்தித்தல்' என்ற நூல் காரணமாக அவருக்கு நாஸா நிறுவனத்தில் பணியாற்றும் வாய்ப்புக் கிட்டியது. 1963 இல் இச் சம்பவம் நிகழ்ந்தது. தனது சக தோழர் ஒருவரின் எதிர்பாரா விபத்தின் காரணமாகவே 1966 இல் ஜெமினி 12 உறுப்பினராக முதன்முதலாக விண்வெளி ஆராய்ச்சிக்கு செல்ல முடிந்ததாக ஒல்ட்ரின் கூறினார். இதனால்தான் அப்பலோ விண்வெளிப் பயணத்தில் இணைந்துகொண்டு நிலவில் நடமாடும் வாய்ப்பும் கிடைத்துள்ளது. நிலவுக்கான பயணத்தினால் கிடைத்த வெற்றியினாலும் உலகப் புகழினாலும் ஒல்ட்ரினனினதும், ஆம்ஸ்ட்ரோங்கினதும் வாழ்க்கையில் தலைகீழ் மாற்றங்கள் ஏற்பட்டன. ஓய்வின்மையால் ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக ஒல்ட்ரின் 'மனபதகளிப்பு' என்ற உள நோய்க்காளானார். பின்னர் அதிலிருந்து மீட்சி பெற்ற அவர் மன பதகளிப்பிலிருந்தும் மது போதையிலிருந்தும் மக்களை விடுவிக்கும் முகமாக 'மெண்டல் ஹெல்த் அமெரிக்கா' (அமெரிக்காவின் உள ஆரோக்கியம்) என்ற ஸ்தாபனத்தினை நிறுவி அதன் தலைவராக தற்போதும் செயலாற்றி வருகின்றார்.

அவர் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு 'ரிட்டர்ன் டு ஏர்த்' என்ற பெயரில் நூல் ஒன்றையும் எழுதினார். மீண்டும் மனிதன் நிலவுக்கு செல்வது அவசியம் அற்றது என்று ஒல்ட்ரின் இந்த நேர்காணலின்போது வலியுறுத்தினார். அதற்காக செலவழிக்கப்படும் நிதியினை பயன்படுத்தி பிரபஞ்சத்தில் உள்ள விடயங்களையும் பூமிக்கு அப்பால் வெகு தொலைவில் உள்ள விடயங்களையும் ஆராய முயற்சிக்க வேண்டும் என்றும் அவர் கூறுகின்றார்.

வெல்லுங்கள்

விஜய் உடன் TOP NEWS வழங்கும் வாரம் ஒரு iPod...




பிரதி புதன்கிழமைகளில் வெளிவரும் 'விஜய்' பத்திரிகையை நன்கு வாசித்து அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் iPod இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக் கொள்ளுங்கள்.

'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலட்டையில் ஒட்டி 23.10.2013 ஆம் திகதிக்குள் அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்கு தெரிவுசெய்யப்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு iPod பரிசாக வழங்கப்படும்.




25.09.2013 'Top News' கேள்விக்கான விடை:

ஃபோர்ட்டன் (Fortan)

ipod பரிசை பெறுபவர் :

ப.துர்ஷித்தா,
156/2, ஹேகித்த, வத்தளை.

விஜய் – TOP NEWS

இவ்வார கூப்பன் (16.10.2013)

விடை: ..........
பெயர்: ..........
வீட்டு முகவரி: ..........
..........
பாடசாலை முகவரி: ..........
..........
வயது: ..........
தொ.பே.இல: ..........

அனுப்ப வேண்டிய முகவரி:

iPod பரிசுப் போட்டி,
'விஜய்'
த.பெ.இல: 2037,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீலக்கோள் (புவி) தொடர்பான சில தகவல்கள்



- சூரியனிலிருந்து உள்ள தூரம் - 149.6 மில்லியன் கிலோமீற்றர்.
- சூரியனை மிக அண்மித்த தூரம் - 147.2 மில்லியன் கிலோமீற்றர்.
- சூரியனுக்கு மிக அதிகரித்த தூரம் - 152.2 மில்லியன் கிலோமீற்றர்.
- சுழற்சிக்கு எடுக்கும் காலம் - 23 மணித்தியாலங்கள் 56 நிமிடங்கள்
- சுற்றுகைக்கு எடுக்கும் காலம் - 365.25 நாள்.
- சாய்ந்து காணப்படும் பாகை அளவு - $23\frac{1}{2}^{\circ}$


எம்.என்.நஸீப் நுஸ்கி,
ஹக்கலை

## ஆண்டு நிறைவு விழாக்கள்

- ஒரு வருடம் - காகித விழா
- இரண்டு வருடம் - பருத்தி விழா
- மூன்று வருடம் - தோல் விழா
- நான்கு வருடம் - பூ விழா
- ஐந்து வருடம் - மர விழா
- ஆறு வருடம் - கற்கண்டு விழா
- ஏழு வருடம் - செம்பு விழா
- ஒன்பது வருடம் - மணிக்கவச விழா
- பத்து வருடம் - தகர விழா
- பதினைந்து வருடம் - படிக விழா
- இருபத்தைந்து வருடம் - வெள்ளி விழா
- முப்பது வருடம் - முத்து விழா
- நாற்பது வருடம் - மாணிக்க விழா
- ஐம்பது வருடம் - பொன் விழா

எப்.எப்.இஸ்ரா,
அக்/அல்-முனீறா பெண்கள் உ.பாட.,
அட்டாளைச்சேனை.

## பெரிய கொடை



புகழ்பெற்ற எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவர் செல்வந்தராகவும் இரக்கப்பண்பு உடையவராகவும் விளங்கினார். தன்னை நாடி வருபவர்களுக்கு உதவிகள் பல செய்தும் வந்தார். ஒருநாள் அவர் ஏதோ வேலையாக வெளியூர் சென்றுகொண்டிருந்தபோது கந்தல் ஆடையுடன் கண்கள் குழி விழுந்து பரிதாபமாகக் காட்சி அளித்த பிச்சைக்காரன் ஒருவன் அவர் அருகே வந்தான். ''ஐயா! நான்கு நாட்களாக நான் பட்டினியாக இருக்கிறேன். இந்த ஏழைக்கு ஏதேனும் பிச்சை போடுங்கள்'' என்று கையை நீட்டினான். அவனுக்கு உதவி செய்ய நினைத்த அவர் தமது சட்டைப் பைகளைத் துழாவினார். அப்பொழுது அவரிடம் ஒரு காசு கூட இருக்கவில்லை.

அவனைப் பார்த்த அவர், ''சகோதரனே! என்னிடம் இப்பொழுது காசு இல்லை. நீ என் வீட்டிற்கு வந்தாலோ அல்லது உன்னை மறுமுறை சந்தித்தாலோ நான் உனக்கு நிறையக் காசுகள் தருகிறேன்'' என்றார்.

இதைக்கேட்ட அவன் தழுதழுத்த குரலில், ''ஐயா! யாரும் இதுவரை எனக்கு அளிக்காத பெரிய கொடையைத் தாங்கள் எனக்கு அளித்தீர்கள். என்னையும் மனிதனாக மதித்துச் 'சகோதரனே' என்று அழைத்தீர்களே. அதுவே எனக்குப் போதும். நன்றி'' என்று உணர்ச்சி பொங்கக் கூறிவிட்டு அந்தப் பிச்சைக்காரன் மகிழ்வுடன் அங்கிருந்து சென்றான்.




எச்.எம்.அஸ்லாம்,
ஓட்டமாவடி தேசிய பாட.,
ஓட்டமாவடி.

## குளங்களும் அதனைக் கட்டிய மன்னர்களும்

| | |
|---|---|
| 01. மின்னேரியாக்குளம் | - மகாசேனன். |
| 02. கலாவாவி | - தாதுசேனன் |
| 03. பசவக்குளம் | - வசபன் |
| 04. பராக்கிரம சமுத்திரம் | - பராக்கிரமபாகு |
| 05. அபய வாவி | - பண்டுகாபயன் |
| 06. திஸ்ஸவாவி | - தேவநம்பிய தீசன் |



### ஆறுகளும் கலக்குமிடமும்

| | |
|---|---|
| மகாவலி கங்கை | - திருகோணமலை, கொட்டியாரக்குடா |
| களுகங்கை | - களுத்துறை |
| வளவகங்கை | - ஹம்பாந்தோட்டை |
| நில்வளகங்கை | - மாத்தறை |
| களனி கங்கை | - கொழும்பு |

எம்.என்.சுஹைர்,
தி/அல்-ஹிஜ்ரா ம.வித்., முள்ளிப்பொத்தானை.

## பிரபல்யம் பெற்றவர்கள்

01. பில்கேட்ஸ் - கணினி மென்பொருள் உற்பத்தி நிறுவனத் தலைவரான இவர் உலகின் மிகப்பெரும் செல்வந்தர் ஆவார்.
02. யசீர் அரபாத்- முன்னாள் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர்.
03. ஆன் சாங் சூகி - 1991 இல் சமாதான நொபேல் பரிசு வென்றவரும் வியட்னாமின் சுதந்திரப் போராட்ட வீராங்கனையுமாவார்.
04. இடி அமீன்- சதிப்புரட்சியின் மூலம் உகண்டாவின் ஜனாதிபதியாக விளங்கிய சர்வாதிகாரி.
05. அன்னை திரேசா - ஆதரவற்ற சிறார்களுக்கும் ஏழைகளுக்கும் அடைக்கலம் கொடுத்த இவர், புனித பாப்பரசர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பரால் 'புனிதர்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர்.
06. ஹெலன் ஹெல்வர் - பார்க்கவோ, பேசவோ, கேட்கவோ முடியாத இப்பெண் உலகப் புகழ்பெற்ற எழுத்தாளராவார்.
07. பராக் ஒபாமா - அமெரிக்காவில் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது கறுப்பின ஜனாதிபதி.

உ.சுவர்ணா, [illegible] மு.ம.வித்., வவுனியா.



## மலரும் காலை

காலைக்கதிரவன்
தன் கிரணமதைப் பரப்பி
கண்கூசும் கதிரொளியாய்
காரிருள்தனை அகற்றுவான்!

செக்கச் சிவந்த வானம்
ஜெகத்தை எழிலூட்ட
செழிப்போடு வீசும் தென்றல்
செங்கமலமதன் மொட்டை அவிழ்த்ததென்ன!

பகலவன் பகல் பயணம் தொடர
தண்மை தரணியை விட்டொழிய
காலை தன்நிலை மாற
இனிதே செம்பகலை வரவேற்கும்!

ச.டி.னோஸ்காந்,
மட்/புனித மிக்கேல் கல்., மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வழி காட்டுங்கள்

1






**தயாரிப்பு - ஸாரா**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.10.23 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 439**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 436 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
தே.லக்ஷிகா, முல்லைத்தீவு.

**போட்டி: 02**
எஃப்.பாரிஜா, காலி.

**போட்டி: 03**
யு.பிரதாபன், மட்டக்களப்பு.

**போட்டி: 04**
ஆர்.சச்சின், கொழும்பு-14.


**போட்டி: 05**
ஏ.இஷானா, ரத்மலானை.

**பாராட்டுப் பெறுவோர்:**


- அஸ்லி சஹான், காங்கேயனோடை - 12.
- சி.சிவநந்தினி, திருகோணமலை.
- எ.ஃப்.நிஷ்மா, பேருவளை.
- க.திஷானி, களுவாஞ்சிக்குடி.
- ம.பிரியங்கன், முள்ளியவளை.
- எ.ஃப்.சஜியா, எதுன்கஹகொட்டுவ.
- எம்.அதீப், ஏறாவூர்-02.
- ப.றெஜினோல்ட், முள்ளிவாய்க்கால்.
- தஸ்னி சிரோஸ், சாய்ந்தமருது-07.
- பிஷார் அஜ்மல், வறக்காப்பொளை.

## அறிவுக்கு விருந்து - 436 விடைகள்

**போட்டி: 01**



**போட்டி: 03**




**போட்டி: 04**

1. மரவேர் - மரம்+வேர்
2. நீர்த்துளி - நீர்+துளி
3. திருவடி - திரு+அடி
4. மணியோசை - மணி+ஓசை

**போட்டி: 05**

1. வாள் - வாட்கள்
2. குடம் - குடங்கள்
3. நுட்பங்கள் - நுட்பம்
4. எழுத்து - எழுத்துக்கள்
5. படகுகள் - படகு
6. வேண்டுதல்கள் - வேண்டுதல்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 55



**மேலிருந்து கீழ்**

01. பயன் அற்றது என ஒதுக்கப்படுவது.
02. தீங்கு.
03. இந்துக்களின் முழு முதற் கடவுள்.
05. தாமரை.
08. சீனியை காய்ச்சும்போது வரும் நிலை.

**இடமிருந்து வலம்**

01. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று.
04. தழும்பு. (மாறியுள்ளது)
06. பானையில் இருந்தால்தான் இதில் வரும் என்பார்கள். (மாறியுள்ளது)
07. மரம்.
08. கவிஞர்.
09. அழகிய-வேகமாகத் துள்ளி ஓடக்கூடிய மிருகமொன்று.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.54 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பு | ல | ம் | ப | ல் | |
| ன் | | ட | | ன | |
| சி | ப | 2 த | | ன் | 3 தா |
| ரீ | 4 தி | | 5 பு | 6 க | ழ் |
| ப் | | | ன் | | வு |
| 7 பு | ற் | று | 8 நோ | ய் | |

## 4

கூட்டத்தைக் குறிக்கும் சரியான சொல்லைத் தெரிவுசெய்து, புள்ளிக்கோட்டில் எழுதுக
(மந்தை/தொடர்/கூட்டம்/குலை/தோப்பு)


1. பழம் - ..............................
2. முகில் - ..............................
3. மலை - ..............................
4. தென்னை - ..............................
5. மாடு - ..............................

## எதிர்ப்பதம் தருக — 5


1. கீழோர் - ..............................
2. உறவு - ..............................
3. ஆண்டான் - ..............................
4. அவரோகணம் - ..............................
5. மறதி - ..............................
6. சாதகம் - ..............................

## 2

நிழற்றப்பட்டுள்ள பகுதியைக் குறிக்கும் பின்னத்தில் வட்டமிடுக




## இடைவெளிகளை நிரப்புக — 3




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கல்முனை-02 ஐச் சேர்ந்த தயாகரன்-செவ்வந்தி தம்பதியரின் செல்வப் புதல்வி சதுஷ்க்கா, தனது பத்தாவது பிறந்தநாளை 10.10.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இருதயநாதர் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.





யோனகபுர திக்குவல்லையைச் சேர்ந்த சாகிர்-சப்னா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஸாகிப் உமர், தனது முதலாவது பிறந்ததினத்தை 25.09.2013 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: சபீனா)*

ஹுரிமலுவ, ரம்புக்கனையைச் சேர்ந்த ரிஸ்மி-ரிஸானா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா இல்மா, தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளை 20.09.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் கிருபையால் பல்கலையும் கற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: எச்.திக்ரா)*

கட்டுகஹவத்தை, தெவனகலயைச் சேர்ந்த எம்.நௌஸில்-சிஹானா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மத் இஷ்ஃபாக், தனது ஏழாவது பிறந்ததினத்தை 19.09.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...

ஜோர்ஜஸ் ப்ராக், 1882 ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி பிரான்ஸின் Argenteuil எனுமிடத்தில் பிறந்தார். சிறு வயதில் லெ ஹாவ்ரே எனும் இடத்தில் வாழும் காலத்தில் வீடுகளுக்கு நிறம் பூசுபவராகவும் ஓர் அலங்கரிப்பாளராகவும் பயிற்சி பெற்றார். பின்னர் 1897 மற்றும் 1899 இற்கு இடைப்பட்ட காலத்தில், Ecole des Beaux-Arts எனும் கலைக் கல்வியகத்தில் மாலை நேர வகுப்புக்குச் சென்றார். 1903 தொடக்கம் 1904 வரை ஹம்பர்ட் எக்கடமியில் இணைந்திருந்தார்.



### ஜோர்ஜஸ் ப்ராக் (1882-1963)

அதன் பின்னர், சிறந்த ஓவியராகவும் சிற்பியாகவும் புகழ்பெற்றார். 'கனவடிவவாதம்' (Cubism) எனும் ஓவியப் பாணியில் ஓவியங்களை வரைந்தவர்களுள் இவரும் ஒருவர். ஆரம்பகாலத்தில் இவரது ஓவியங்கள் உணர்வுப்பதிவுவாத ஓவியப் பாணியிலேயே அமைந்திருந்தன. எனினும், 1905 இல் Fauvism பாணியில் ஓவியம் வரையும் ஒரு குழுவினரின் ஓவியங்களைப் பார்த்த பின்னர், இவரது ஓவியங்களும் அப்பாணியில் அமையலாயின. 1908 இன் பின்னர் கனவடிவவாதத்தைப் பின்பற்றிய ஓவியங்களை வரைவதிலும் ஜோர்ஜஸ் ப்ராக் ஆர்வம் காட்டினார். Houses at L'Estaque, Landscape at La Ciotat, Violin and Candlestick, The Cup, Man With a Guitar, Little Harbor in Normandy போன்ற பல்வேறு ஓவியங்களை வரைந்து புகழ்பெற்ற ஜோர்ஜஸ் ப்ராக், 1963 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 31 ஆம் திகதி பெரிஸ் நகரில் உயிர் நீத்தார்.

**-ஜீநு**


Landscape at La Ciotat



Little Harbor in Normandy




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு


ந.சுனைஹர்,
அல்-ஹிஜ்ரா ம.வித்.,
முள்ளிப்பொத்தானை.



ஆர்.முஹமட் ஷா,
தெஹி தெனியா மு.ம.வித்.,
ஹதரலியத்த.


ரா.சிந்துயன்,
யாழ்.இந்துக் கல்., யாழ்ப்பாணம்.


எம்.சப்ராஸ்,
அல்-ஹிதா மு.ம.வித்., ரிதீகம.


எஸ்.சபிஷன்,
தலவாக்கலை த.ம.வித்.,
தலவாக்கலை.


எஃப்.சுஹைனா,
பதுரியா மத்.கல்., மாவனல்லை.


எம்.ஹமாஸ் அஹமட்,
திகவடவன மு.வித்.,
தம்புள்ள


வி.தேனுஷாந்,
இளவாலை
புனித ஹென்றியரசர் கல்.,
இளவாலை.


சு.தனுசியன்,
அச்சுவேலி மத்.கல்.,
அச்சுவேலி.


க.நாரயணி,
யாழ்.வேம்படி உ.பாட.,
யாழ்ப்பாணம்.


ச.கேமினி,
இலங்கை திருச்சபை
த.க.பாட., வவுனியா.

## 'விழா உலா' குறித்து உங்கள் கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.

பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்கள்




ஜோன் வோக்கர்
(John Walker)
1826 - பிரித்தானியா



தீக்குச்சி




ரிச்சர்ட் ட்ரிவிதிக்
(Richard Trevithick)
1804 - பிரித்தானியா



புகையிரதம்



லூயிஸ் லீ பிரின்ஸ்
(Louis Le Prince)
1885 - ஃப்ரான்ஸ்



திரைப்படம்



எட்வின் டி.ஹோல்மெஸ்
(Edwin T.Holmes)
1858-அமெரிக்கா



பாதுகாப்பு அலாரம்



ஜோன்.ஜே.லவுட்
(John J.Loud)
1888 - அமெரிக்கா



குமிழ்முனைப் பேனை



அலெக்சாண்டர் ஃப்ளமிங்
(Alexander Fleming)
1928 - ஸ்கொட்லாந்து



பென்சிலின்

(தொடரும்)

# உயிரியல் வகைப்பாடு

## அல்லி



அல்லி அல்லது ஆம்பல் எனப்படும் இந்த பூ நீரில் வளரும் ஒரு கொடிப் பூ ஆகும். அல்லி இனத்தில் சுமார் 50 வகையான கொடிகள் உள்ளன. அல்லி இரவில் மலர்ந்து காலையில் குவியும் ஒரு மலராகும். எகிப்தில் உள்ள நைல் நதியில் பூக்கும் நீல நிற அல்லி இரவில் மலர்ந்து காலையில் குவியும் என்றாலும், அதே ஆற்றில் பூக்கும் வெண்ணிற அல்லி காலையில் மலர்ந்து இரவில் குவிகின்றது.

| | |
|---|---|
| திணை (இராச்சியம்): | தாவரம் |
| பிரிவு: | மெக்னோலியோபைட்டா |
| வகுப்பு: | மெக்னோலியோப்சிடா |
| வரிசை: | அல்லி பேரினம் *(Nymphaeales)* |
| குடும்பம்: | அல்லிகள் *(Nymphaeaceae)* |
| பேரினம்: | அல்லி |
| இனம்: | *Nymphaea* |

## செம்பருத்தி



செம்பருத்தி அல்லது செவ்வரத்தை (***Hibiscus rosa-sinensis***) என்று குறிப்பிடப்படும் இந்த பூ வரள்வலயங்களில் வளரும் ஒரு தாவர இனம் ஆகும். இது செடி இனத்தைச் சார்ந்தது. இதன் பூ மருத்துவக் குணங்களைக் கொண்டது. இது 'சீன ரோஜா' எனவும் அழைக்கப்படுகிறது. செம்பருத்தி மலேசியாவின் தேசிய மலராகும். இந்த பூ பெரும்பாலும் அழகுத்தாவரமாகவே வளர்க்கப்படுகிறது.

| | |
|---|---|
| திணை (இராச்சியம்) : | தாவரம் |
| (தரப்படுத்தப்படாத): | பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) : | இருவித்திலைத் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத): | ***Rosids*** |
| வரிசை: | ***Malvales*** |
| குடும்பம்: | ***Malvaceae*** |
| பேரினம்: | ***Hibiscus*** |
| இனம்: | ***H.rosa-sinensis*** |

(தொடரும்)

## மல்லிகை



மல்லிகை *(Jasminum sambac)* மருத்துவ மூலிகைப் பயன்பாடுடைய ஒரு தாவரமாகும். இதன் பூக்கள் நறுமணமுடையவை. பெண்கள் தலையில் சூடும் மாலைகளாகவும் மதஸ்தலங்களில் பூஜை வழிபாடுகளிலும் பயன்படுகிறது. மல்லிகை பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய மலராகும்.

ஜாஸ்மினம் என்று பண்டைய ஃபிரெஞ்ச் மொழியிலும் அரபியில் ஜாஸ்மின் என்றும் பாரசீக மொழியில் யாஸ்மின் என, அதாவது 'கடவுளின் பரிசு' எனப் பொருள்படுவதாக அழைக்கப்படுகிறது. மல்லிகை 'ஒலிவ்' குடும்பமான ஒலிசியே என்னும் புதர்கள் மற்றும் கொடிகள் சார்ந்த ஒரு பேரினமாகும். இதில் மொத்தமாக 200 இனங்கள் உள்ளன. இவை உலகில் மிதமானது முதல் அதிகரித்த வெப்ப மண்டலங்களில் வளரும் ஓர் இனமாகும். இவற்றின் இலைகள் என்றும் பசுமை மாறாமலும் உதிரிலைகளாகவும் இருக்கின்றன.

| | |
|---|---|
| திணை: (இராச்சியம்) | தாவரம் |
| பிரிவு: | பூக்கும் தாவரம் |
| வகுப்பு: | *Magnoliopsida* |
| வரிசை: | *Lamiales* |
| குடும்பம்: | *Oleaceae* |
| பேரினம்: | *Jasminum* |
| இனம்: | *J.sambac* |


## முல்லை



முல்லை (***Jasminium auriculatum***) ஒலியேசியே குடும்பத்தைச் சார்ந்த மல்லிகை இனமாகும்.


| | |
|---|---|
| திணை: (இராச்சியம்) | தாவரம் |
| (தரப்படுத்தப்படாத): | பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத): | இரு வித்திலைத் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத): | *Asterids* |
| வரிசை: | *Lamiales* |
| குடும்பம்: | *Oleaceae* |
| பேரினம்: | மல்லிகை |
| இனம்: | *J.auriculatum* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தோல்வியே வெற்றிக்கு வழிவகுக்கும்!







மனிதனின் வாழ்க்கையில் அவனது முயற்சிகளுக்கும் தேடல்களுக்கும் ஒரு முடிவு உள்ளது. அந்த முடிவு வெற்றியாகவும் இருக்கலாம் அல்லது தோல்வியாகவும் இருக்கலாம். எது எவ்வாறு இருப்பினும், அதனை அடையும்போது, ஒருவர் எவ்வாறு அதனை நோக்க வேண்டும்?, எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? என்பது மிகவும் முக்கியமானது.

வெற்றி என்பது மனிதனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். தோல்வி என்பது கவலையைக் கொடுக்கும். இருப்பினும், அவ்வாறான மகிழ்ச்சியை, கவலையை எவ்வாறு அணுக வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

மனிதனது முயற்சியில் சில சமயங்களில் தோல்வி ஏற்படக்கூடும். தோல்வி ஏற்பட்டால்தான் எம்மில் இருக்கும் பிழைகளை இனங்கண்டு, அவற்றைத் திருத்திக்கொள்ள முடியும். ஆகவே, தோல்வியடைய நேரிட்டால், அதனைப் பெரிதாகக் கருதாமல், தொடர்ச்சியாக நாம் முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

தோல்விகளை சந்திக்கின்றபோது, ஒருபோதும் தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் இழக்கக்கூடாது. ஏனெனில், எமக்கு ஏற்படும் சிறு சிறு தோல்விகள் நாம் அடையவிருக்கும் பெரும் வெற்றிகளுக்கு வழிவகுக்கும்.





கல்வியிலும் தோல்வி என்பது தவிர்க்க முடியாததாகவே உள்ளது. எனினும், ஒவ்வொரு தோல்வியும் அனுபவத்தையும் ஊக்கத்தையும் எம்மிடையே ஏற்படுத்த வேண்டும். அந்த தோல்வியை எமக்கு சாதகமானதாகப் பயன்படுத்த வேண்டும். இன்னொரு தடவை தோல்வி ஏற்படாமல் இருக்க எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று சிந்தித்து செயற்பட வேண்டும்.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**



# செவ்வாயில் எரிமலைகள்




செவ்வாய் கிரகம் தொடர்பில் நாளுக்கு நாள் பல்வேறு ஆச்சரியமான தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்தவகையில், செவ்வாயில் 'Supervolcano' எனப்படும் எரிமலைகள் இருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியுள்ள கியூரியோசிட்டி எடுத்து அனுப்பியுள்ள புகைப்படங்களை ஆராய்ந்ததை அடுத்தே, இது தெரியவந்துள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்தப் புகைப்படங்களை நோக்கும்போது சுமார் 3.5 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் செவ்வாயில் மிகப் பெரிய எரிமலை வெடிப்பு இடம்பெற்றிருக்கலாம் எனத் தாம் கருதுவதாக டக்ஸன் கிரக அறிவியல் கழக விஞ்ஞானியான Joseph Michalski தெரிவித்துள்ளார்.

# 2018 இல் விண்வெளிக்கு வீரர்களை அனுப்ப ஈரான் திட்டமிட்டுள்ளது...



விண்வெளி ஆய்வுகளை முன்னெடுப்பதில் பல்வேறு நாடுகளும் ஆர்வம் காட்டி வருகின்ற நிலையில், அந்தப் பட்டியலில் தற்போதளவில் ஈரானும் இணைந்துள்ளது. அதன்படி, எதிர்வரும் 2018 ஆம் ஆண்டளவில் விண்வெளிக்கு வீரர்களை அனுப்ப ஈரான் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையிட்டு, தற்போதளவில் விண்வெளி ஆய்வுத்திட்டங்கள் குறித்து ஈரான் பல்வேறு பரீட்சார்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.அதன் ஓர் அங்கமாக, விலங்குகளை ரொக்கெட் மூலம் விண்வெளிக்கு அனுப்பி பரிசோதனைகளை நடாத்தி வருகின்றது. அதற்கமைய, கடந்த 2010 ஆம் ஆண்டில் எலி மற்றும் ஆமையை அனுப்பி வைத்தது. அண்மையில், பிஷ்காம் எனும் குரங்கொன்றையும் அனுப்பியதோடு, அந்தக் குரங்கு பத்திரமாக பூமிக்குத் திரும்பியிருந்தமையும் குறிப்பிடத் தக்கது.





இந்நிலையில், எதிர்வரும் மார்ச் மாதமளவில் 'பெர்சியன்' இன பூனையொன்றை அனுப்பவுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து எலி மற்றும் முயல் ஒன்றையும் விண்வெளிக்கு அனுப்பும் திட்டம் பரிசீலனையில் உள்ளதாகவும் ஈரான் விண்வெளித் திட்ட சிரேஷ்ட அதிகாரியான முகம்மத் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1988

**16 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1988**
**அவுஸ்திரேலியா**

14,434 சாரணர்கள்

84 நாடுகள்




Cataract Scout Park, New South Wales

டிசம்பர் 30.1987- ஜனவரி 10.1988







அவுஸ்திரேலியாவில் நியூசௌத் வேல்ஸி லுள்ள Cataract Scout Park இல் பதினாறாவது உலக சாரணர் ஜம்போரி 1987 டிசம்பர் 30 ஆம் திகதி ஆரம்பித்து, 1988 ஜனவரி 10 ஆம் திகதி நிறைவுற் றது. இதில் 84 நாடுகளைச் சேர்ந்த 14,434 சாரணர்கள் பங்கேற்றனர்.



பதினாறாவது உலக ஜம்போரி யின் நோக்கம் 'Bringing The World Together' என அறிவிக்கப் பட்டது. கீழைத்தேய நாடுகளில் நடைபெற்ற முதலாவது ஜம்போரி இதுவாகும். அவுஸ்திரேலியாவில் கடந்த 200 ஆண்டுகளில் நடைபெற்ற முதலாவது அலுவலக நிகழ்ச்சி இது என்பதும் குறிப்பிடத் தக்கது. சவால் நிறைந்த பள்ளத் தாக்கில் நடைபெற்ற தடை தாண் டும் பயிற்சிகள் பதினாறாவது உலக ஜம்போரியின் சிறப்பம்ச மாக இருந்தது. இது பதினா றாவது உலக ஜம்போரியில் அனைவரையும் கவர்ந்த புகழ் பெற்ற செயலாகக் கருதப்பட் டது. 'The Great Aussie Surf Carnival' நிகழ்வுக்காக 50 பேரூந் துகளில் சாரணர்களை 'Thirroul' கடற்கரைக்கு அழைத்துச் சென்ற மையானது, அதில் கலந்து கொண்ட சாரணர்களுக்கு மறக்க முடியாத நிகழ்வாக அமைந்தது எனலாம்.

## சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப் பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரணர் உறுப்பினர் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| பங்களாதேஷ் | 1,015,116 | 1974 | 1972 |

(தொடரும்)

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)

## நீண்டகால சாரண சேவையாளர்களுக்கு கௌரவம்

இலங்கை சாரணர் சங்கத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்டகால மாக சாரணர் சேவையில் உள்ள தலைவர்களுக்கு Long Service Decoration அதாவது நீண்ட நாள் சேவைப்பத்திரமும் சின்னமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதில் 15 வருடங்கள் மற்றும் 25 வருடங்கள் தொடர் சேவை யினை நிறைவு செய்தவர் களுக்கு மேற்படி கௌரவம் கிடைத்துள்ளது.




ஜனாதிபதி சாரணன் S. விக்னேஸ்வரன், ஜனாதிபதி சாரணன் M. ஜெகதீஸ்வரன், ஜனாதிபதி சாரணன் K. விக்கினராசா மற்றும் சாரணர் நட்சத்திர சின்னம் பெற்ற N. கருணாகரன் ஆகியோருக்கு 15 வருடங்கள் சேவைப் பத்திரமும் சின்னமும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், கலாநிதி M. புவனேந்திரன் C.L.T, திருமதி R.J.B. சேவியர் L.T, திரு R. தவகோபால் A.L.T ஆகியோருக்கு 25 வருடங்கள் சேவைப்பத்திரமும் சின்னமும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய் சாரணர் உலகம்

## முதலுதவி பயில்வோம்

சாரணர்கள் எப்போதும் ஏனையவர்களுக்கு உதவிக்கரமானவர் களாக இருப்பர். எனவே, இவ்வாறானவர்கள் எந்தவொரு சந்தர்ப் பத்திலும் முதலுதவிச் சிகிச்சைகளை வழங்கக்கூடிய அறிவினைப் பெற்றிருக்கவேண்டும்.

ஒருவரது விரல் பகுதியில் திடீரென ஏற்படக்கூடிய சிறு காயத்திற் கான முதலுதவியை எவ்வாறு செய்யலாம் என்பது இங்கு காட்டப் படுகின்றது.




★ காயப்பட்ட இடத்தைக் குழாய் நீரில் பிடித்து நன்றாகக் கழுவவும்

★ விரலை மேல்நோக்கி பிடித்தவாறு அதனைச் சுத்தமான பஞ்சினாலோ அல்லது கோஸ் துணியினாலோ துடையுங்கள்

★ காயத்தினுள் கிருமிகள் செல்ல முடியாத பொருத்தமான அளவில் பிளாஸ்டர் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள்.

பின்னர் 'கோஸ்' துணியில் காயத்திற்கான மருந்தைத் தடவி அதனை காயத்தின்மீது வைத்து கட்டிப் ப்ளாஸ்டரினால் ஒட்டிவிடவும்.

## உயிர்களை மீட்கும் 'உயிர் மீட்பு முடிச்சு'




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சைக்கிள் ஓட்டுனரின் உடல்நிலையை அளக்கப் பயன்படும் 'ஸ்மார்ட் ஹெல்மட்'

## LifeBEAM SMART

சைக்கிள் ஓட்டுவதென்பது எமது முழு உடம்பையும் தொழிற்படச் செய்யும் ஒரு செயலாகும். பொதுவான அபிப்பிராயத்தின்படி, சைக்கிள் ஓட்டுவதானது உடற் சுகாதாரத்தை முறையாக காப்பதற்கான நல்லதொரு உடற்பயிற்சி முறை என்று கூறப்படுவதுண்டு. தொழில் ரீதியிலான சைக்கிள் ஓட்டுனர்கள் தலைக்கவசம் (ஹெல்மெட்) அணிந்துகொண்டு சைக்கிள் ஓட்டுவதை கண்டுள்ளோம். இவ்வாறு 'ஹெல்மட்' அணிவது பாதுகாப்பிற்காகவாகும். ஆனால், உடம்பின் இருதய இயக்கம், இரத்த ஓட்டம் மற்றும் உடல் இயக்கம் போன்றவற்றை அந்தக் கணத்திலேயே கனிக்கும் வல்லமையைக் கொண்ட ஒருவகை 'ஹெல்மட்டை' அமெரிக்காவின் 'லைஃப்பீம்' என்ற நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இது இலங்கை நாணயப் பெறுமதியில் ரூபா 26,000 ஆகும்.







- இருதய ஓட்ட வேகத்தைக் கணிப்பதற்கு 'பெல்ட்' அணியத் தேவையில்லை.
- [illegible]
- எந்தவகையான காலநிலைக்கும் ஒத்துவரக்கூடியது.
- அவசியப்படாத நேரங்களில் தானாகவே தொழிற்பாட்டை நிறுத்திவிடும்.
- 170 mAh லித்தியம் பொலிமர் பெற்றரி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

| வெளிப்படுத்தக்கூடிய அதிகூடிய இருதய வேகம் (நிமிடத்திற்கு) | வெளிப்படுத்தக்கூடிய ஆகக்குறைந்த இருதய வேகம் (நிமிடத்திற்கு) | |
|---|---|---|
| 220 BPM | 30 BPM | |
| உணரியாக செயற்படும் வெப்பநிலை செல்சியஸ் | மின்கலத்தின் ஆயுட்காலம் | மின்கல 'சார்ஜ்' சேமிப்பு |
| 5-45$^0$c | 05+ | 15h |
| ஹெல்மட் நீங்கலாக பொருத்தப்பட்டிருக்கும் மேற்படி கருவியின் நிறை | | 50g |

### ஹெல்மட்டில் உள்ள உணரிகள் தொழிற்படும் விதம்.




கிடைக்கப்பெறுகின்ற அனைத்து தரவுகளும் 'ப்ளூடூத்' ஊடாக ஸ்மார்ட் ஃபோன் அல்லது அவ்வசதி உள்ள கணினி அல்லது கைக்கடிகாரத்திற்கு அனுப்பப்படும்.



**உணரி**
உயர்மட்டத்திலான எல்.ஈ.டி (LED) தொழிநுட்பத்தில் செய்யப்பட்டுள்ளது.

**தொழிற்பாட்டு பிரிவு**
இதிலுள்ள மின்கலத்தை சார்ஜ் செய்தல் மற்றும் ஏனைய அமைப்புக்களை மேற்கொள்ளல் ஆகியனவற்றிற்கு உதவிகரமான 'யூ.எஸ்.பி' போர்ட் இதில் உள்ளது.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 16, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org